Registered as a NewsPaper

விலைரூபா-07

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 10

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மார்ச் -11 | 24-03-2004 | புதன்கிழமை | ஓசை -035




# மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்தோம்!

## தமிழ்ச்செல்வனுடனான சந்திப்புக்குறித்து இலங்கைக்கான உலகவங்கிப்பிரதிநிதி

(அலுவலக செய்தியாளர்)

**மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பாகவும், அதற்கான நிதித் தேவையை வழங்குவது மற்றும் பெறுவது தொடர்பாகவும் நேற்று சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களுடனான சந்திப்பில் ஆராயப்பட்டதாக இலங்கைக்கான உலகவங்கிப் பிரதிநிதி பீற்றர்கரோல் தெரிவித்தார்.**

விரைவில் இது தொடர்பாக நல்லதோர் வளர்ச்சி ஏற்படுமென நாம் நம்புகிறோமென அவர் மேலும செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களை இலங்கைக்கான உலக வங்கிப் பிரதிநிதி பீற்றர்கரோல், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஆகியோர் அடங்கிய குழுவினர் கிளிநொச்சியில் நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

தமிழீழ அரசியல்துறை நடுவப் பணியகத்தில் காலை 10.30 மணிக்கு ஆரம்பமாகிய இச்சந்திப்பு சுமார் இரண்டு மணித்தியாலங்கள் நீடித்தது.

இச்சந்திப்பில் தமிழீழ விடுதலைப்புலிகள் சார்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களும், மட்டு. அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், விடுதலைப்புலிகளின் திட்டமிடல் செயலகப் பணிப்பாளர் தூயவன், சிரான் திட்டப் பணிப்பாளர் இறேனியல் செல்வின் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்புக் குறித்து நோர்வேத் தூதுவர் கருத்துத் தெரி

(10ஆம் பக்கம் பார்க்க)

## மண்டைதீவில் பிரச்சாரத்திற்கு கூட்டமைப்பிற்கு கடற்படை தடை

எதிர்வரும் நாடாளுமன்ற பொதுத்தேர்தலிற்கான பிரச்சார நடவடிக்கைகளுக்காக மண்டை தீவுப் பகுதிக்குச்சென்ற தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வேட்பாளர்கள் கடற்படையினரால் திருப்பி அனுப்பிவிடப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதனையடுத்து தீவுப்பகுதிகளிலும் அதிஉயர் பாதுகாப்பு வலயத்தை அண்டி மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள கிராமங்களிலும் தேர்தல் பணிகளில் ஈடுபட நடவடிக்கை எடுத்து உதவுமாறு தேர்தல் ஆணையாளரிடம் தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளர் மாவை.சேனாதிராஜா கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருகையில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வேட்பாளர்களில் ஒருவரான என். ஸ்ரீகாந்தா தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக மக்களை சந்திக்கவென யாழ்.நகரை அண்டிய மண்டை தீவுப்பகுதிக்கு அண்மையில் சென்றுள்ளார். கடற்படையின் கட்டுப்பாட்டின் கீழுள்ள தீவுப் பகுதிக்குள் செல்ல படையினர் அவரை அனுமதிக்கவில்லை. இதையடுத்தே அவரால் செய்யப்பட்ட முறைப்பாடு ஒன்றை அடுத்து மாவை.சேனாதிராஜா இவ்விடயம் தொடர்பாக தேர்தல் ஆணையாள

(10ஆம் பக்கம் பார்க்க)

## - புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதி வாக்காளர் -

## சுதந்திரமாக வாக்களிப்பதைத் தடுப்பது சமாதான முயற்சியைக் கடுமையாகப் பாதிக்கும்!

### ஐரோ. நாட்டுத் தூதுவர்களிடம் சம்பந்தன் வலியுறுத்து



(திருகோணமலை)

"எதிர்வரும் பொதுத்தேர்தலில் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வாழும் பல்லாயிரக்கணக்கான தமிழ் வாக்காளர்கள் சுதந்திரமாக இடையூறு ஏதுமின்றி வாக்களிப்பதைத் தடுப்பது தற்போதைய சமாதான முயற்சியைக் கடுமையாகப் பாதிக்கும். அத்துடன் நாட்டின் தேர்தல் முறையிலும் சனநாயக நடைமுறையிலும் தமிழ் மக்கள் நம்பிக்கை இழக்கவும் இது வழிகோலும்" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் நேற்று செவ்வாய் பகல் தம்மைச் சந்தித்து உரையாடிய ஐரோப்பிய நாடுகளின் தூதர்களிடம் தெரிவித்தார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஈருருளி பழுதுபார்க்கும் கடை இனந்தெரியாதோரால் எரிப்பு

மட்டக்களப்பு எல்லை வீதியின் ஈருருளி பழுதுபார்க்கும் கடை ஒன்று இனந்தெரியாதவர்களால் தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளது. நேற்று மாலை சனசந்தடி உள்ள நேரத்தில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

உந்துருளியில் வந்த இரு இளைஞர்கள் இந்தக் கடைக்கு தீவைத்ததாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். அங்கு பழுது பார்ப்பதற்கென வைக்கப்பட்டிருந்த ஈருருளிகளும் இதன்போது

(10ஆம் பக்கம் பார்க்க)

## பாதாள உலகக் கைதி ஒருவருக்கு சிறைக்காவலர்கள் சலுகை

வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து பாதாள உலகக் கைதியொருவரை அனுமதியின்றி அவரது வீட்டுக்கு அழைத்துச் சென்ற சிறைச்சாலை அதிகாரிகள் குறித்து விசாரணைகள் நடைபெறுகின்றன. நேற்று முன்தினம் இரவு சிறைச்சாலை வைத்திய சாலைக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி இந்தப் பாதாள உலகக் கைதி அவரது கிருலப்பனை வீட்டுக்குச் சிறைக் காவலர்களால் அழைத்துச் செல்லபட்டிருக்

(10ஆம் பக்கம் பார்க்க)

## எமது விடிவிற்கான பாதையை அகலத்திறக்க தமிழ்க் கூட்டமைப்புக்கு வாக்களியுங்கள்

### நோர்வேத் தமிழ்ச்சங்கம் கோரிக்கை

(ஒஸ்லோ)

இன்று ஒரு முக்கியமான முனையில் வந்து நிற்கும் எமது விடிவிற்கான பாதையை அகலத் திறக்க தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு வாக்களியுங்கள் என நோர்வேத் தமிழ்ச்சங்கம் தாய் மண்ணில் நிற்கும் தமிழர்களிடம் கோரியுள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

எமது தேசிய விடுதலைப் போராட்டம் சர்வதேச அங்கீகா

(10ஆம் பக்கம் பார்க்க)

## க.பொ.த. (சா/த) பெறுபேறுகள் இன்று வெளியாகின்றது

கல்விப் பொது தராதர சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் இன்று வெளியிடப்பட இருக்கின்றது. இதன்படி இன்று காலை வெளிமாவட்டங்களிற்கான பரீட்சை முடிவுகள் அஞ்சலில் அனுப்பிவைக்கப்படும் என பரீட்சைத் திணைக்களம் அறிவித்திருக்கின்றது. அதேநேரம் பரீட்சை முடிவுகள் இணையதளத்திலும் வெளியிடப்படவிருக்கின்றன. (32)

### இணையதளத்தில் பார்வையிடலாம்

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த.(சா/த) பரீட்சை முடிவுகள். இன்று இணையதளம் மூலம் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பரீட்சை முடிவுகளை இணையத்தள மூலம் பார்வையிட விரும்புவோர் சுட்டிலக்கத்துடன் முதன்மைச்சாலை கிளிநொச்சியிலுள்ள ஈழநாதம் பணிமனைக்கு வருகைதரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

## அனுசரணையாளர்களின்றி எத்தரப்புடனும் இரகசியமாகப் பேசும் தேவை எமக்கு இல்லை!

### அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்வதானால் மூன்றாம் தரப்பு அனுசரணை அல்லது மத்தியஸ்தத்தோடுதான் முன்னெடுத்துச் செல்ல முடியும். இதனைப் புறந்தள்ளி இரகசியமான முறையில் தனிப்பட்ட ரீதியில் எக்கட்சியுடனும் புலிகள் தொடர்பு கொள்ள வேண்டிய தேவை இருக்காது என அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தனியார் தொலைக்காட்சி ஒன்றிற்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

***கேள்வி: ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலே பலவிடயங்கள் குறிப்பிடப்படவில்லை. அதாவது தமிழர் தாயகம் என்பதும் புலிகள் ஏகபிரதிநிதிகள் என்பதும் குறிப்பிடப்படவில்லை. இதும் பற்றி உங்களின் கருத்து என்ன?***

பதில்: எங்களைப் பொறுத்தவரை தேர்தலில் நிற்கின்ற அனைத்துக்கட்சிகளும் மக்களுக்கு பல கருத்துக்களை முன்வைக்கின்றார்கள். தேர்தல் பிரகடனங்களையும் ஒருவிதமாக வெளியிடுகிறார்கள். தேர்தலுக்காக மக்கள் மத்தியில் மேடைகளில் பேசுகின்ற போது வேறு விதமாகப் பேசுகின்றார்கள். எங்களைப் பொறுத்தவரை நாங்கள் தெளிவாக இருக்கின்

(10ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### கொடுப்பனவு வழங்கல்

பரந்தன் இரசாயனக் கூட்டுத் தாபன ஊழியர்களது சேவை முடிவுறுத்தல் கொடுப்பனவு எதிர்வரும் 24,25/03/2004. திகதிகளில் வழங்கப்படும். வேலை முகாமையாளர் திரு.சிவபாத சுந்தரம் நிர்வாக அதிகாரி- திரு.ஜெகநாதன். (4331)

### காணவில்லை

15/03/2004இல் இருந்து வெள்ளை எருது S.J செங்காரி எருது N-M என்ற குறியுடைய உழவு மாடுகள் (பிணைத்தபடி) உருத்திரபுரத்தால் மேச்சலுக்கு சென்றவைகள் காணவில்லை. எங்கேனும் கண்டவர்கள் வ.சிவா No-20,D10 உருத்திரபுரம் என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (4334)

### புத்தாண்டு பலாபலன்கள்

எல்லா ராசிபலன்களும் 15/= எங்கும் விற்பனையாகின்றது. கணிப்பாசிரியர் PROF. சத்திய தாஸன்(சத்யா) ஆனைக் கோட்டை கிடைக்குமிடம் குமரன்ஸ, ருக்குமணி புத்தக சாலைகள், புதுக் குடியிருப்பு- பிள்ளையார், உதயன் புத்தகசாலைகள் கிளிநொச்சி T.P.0212222753 (4338)

### தவறிவிட்டது

சின்னத்துரை.ஆனந்தருபன் அ.அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் விளம்பரப்பணிமனையில் ஒப்படைக்கவும். (4336)

-முல்லை. அரசாங்க அதிபரினால்-

# முல்லை. மாவட்ட வாக்காளர்களுக்கான வாக்களிப்பு நடைமுறைகள் அறிவிப்பு

ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி இலங்கையில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலின்போது முல்லை மாவட்ட மக்கள் வாக்குச் சாவடிகளுக்குச் சென்று வாக்களிப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக முல்லை மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

முல்லை மாவட்ட மக்களுக்கான தேர்தல் வாக்களிப்பு நிலையங்கள் அனைத்தும் ஓமந்தைப் பாடசாலையைச் சூழ்ந்த பகுதியிலே அமைக்கப்படவுள்ளதாகவும் அங்கு மக்கள் சென்று வாக்களிப்பதற்கான வாகன ஒழுங்குகளை தமிழீழ போக்குவரத்துக்கழகமும், வவுனியாவிலிருந்து இ.போ.ச. பேருந்துகளும் சேவையில் ஈடுபடவுள்ளது எனவும், 2ஆம் திகதித் தேர்தலுக்கு 1ஆம் திகதியே சென்று தங்கி நின்று வாக்களிப் போருக்கு தங்குமிட வசதி, உணவு, குடிநீர் ஏனைய உதவிகளும் செய்துள்ளதாக அரச அதிபர் தெரிவித்தார்.

இதன் அடிப்படையில் வாக்களிப்பு நிலையங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

எல்லா வாக்காளர்களையும் ஏற்றிவந்து ஒழுங்கு செய்வது அனைத்தும் அந்தந்தப் பகுதி கிராம அலுவலர்கள் மேற்கொள்வார்கள் எனவும், தேர்தல் கடமைக்காக ஈடுபடும் வாகனங்களுக்கான எரிபொருள் வழங்கப்பட்டுள்ளதாகவும், இதில் 65 ஆயிரம் லீற்றர் டீசலும், 10,000 லீற்றர் பெற்றோலும் அனுப்பப்பட்டுள்ளதாகவும், வைத்திய வசதிக்காக (அம்புலன்ஸ்) அவசர நோயாளர் சேவை வாகனங்களும் வைத்தியர்களும் சேவையில் ஈடுபடவுள்ளதாகவும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

எந்தவிதமான தடைகளுமின்றி மக்கள் வாக்களிப்பதற்கு வேண்டிய ஒத்துழைப்பை வழங்குவதாக, 22-03-2004 அன்று முல்லைத்தீவு கச்சேரி மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற தேர்தல் கடமைக்குச் செல்லும் கிராம அலுவலர்கள், உதவி அரச அதிபர்களுக்கான கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (20)

### வீதி நாடக நிகழ்வுகள்

(கிளிநொச்சி)

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் பரவலாக கிளிநொச்சி மாவட்ட கலைக்கல்லூரி மாணவர்கள் வழங்கும் "மீண்டும் ஒரு வரலாறு" எனும் வீதிநாடக நிகழ்வு வரும் பொதுத்தேர்தலை மையமாக வைத்து நடாத்தப்பட்டு வருகின்றது. வருகின்ற பொதுத்தேர்தல் கருத்துரைகளையும், மக்களின் தெளிவூட்டல்களையும் மையப்படுத்தி இவ்வீதிநாடகம் உருவாக்கப் பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கது. (15)

# தொடக்க கல்விவள நிலையம் வைபவரீதியாக திறந்துவைப்பு

(அலுவலகசெய்தியாளர்)

தமிழீழ கல்விக்கழகத்தின் அனுசரணையுடன் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வன்னிப்பெருநிலப்பரப்பில் முதன்முதலாக தொடக்க கல்வி வள நிலையம் நேற்று வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பெற்றது.

தமிழீழ கல்வி பேரவைத் தலைவர் வணபிதா பிரான்சிஸ் யோசெப் அடிகள் தலைமையில் நேற்றுப் பிற்பகல் 2.45 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் தமிழீழ தேசியக்கொடியினை தமிழீழ கல்விக்கழகப்பொறுப்பாளர் வெ.இளங்குமரன் ஏற்றிவைக்க, பேரவைக்கொடியினை பேரவைத் தலைவர் வணபிதா பிரான்சிஸ் யோசெப் அடிகள் ஏற்றிவைத்தார். அகவணக்கத்தினைத் தொடர்ந்து ஈகச்சுடரினை கிளிமுல்லை வலயக் கல்விக்கழகப் பொறுப்பாளர்களான ப.அரியரத்தினம், குருகுலராஜா மற்றும் தமிழீழ கல்வித்தேர்வு ஆணையர் சரவணபவான், நேரு மாஸ்ரர் ஆகியோர் ஏற்றி வைக்க வள நிலைய பெயர்ப்பலகையினை ஜி.ரி.இசற் இணைப்பாளர் க.கந்தசாமி திரைநீக்கம் செய்து வைத்தார். நிலையத்தினை வடகிழக்கு மாகாண பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி வேதநாயகம்



சம்பிரதாய பூர்வமாக நாடாவினை வெட்டித்திறந்து வைத்தார்.

தலைமையுரையினைத் தொடர்ந்து சிறப்புரையினை பேராசிரியர் சண்முகதாஸ்,பேராசிரியர் சந்திரசேகரம் வடகிழக்கு மாகாண பிரதிக்கல்விப்பணிப்பாளர் வேதநாயகம் தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

நன்றியுரையினை தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை செயலர் வ.யோகநாதன் நிகழ்த்தினார். புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வசித்து வரும் துறைசார் ஆர்வலர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.(சோ)

# முல்லை. கள்ளப்பாட்டுப் பகுதியில் எழுச்சித் தீப்பந்த ஊர்வலம்

முல்லைத்தீவு கள்ளப்பாட்டுப் பகுதியில் அப்பகுதி தேசிய எழுச்சிப்பேரவையின் ஒழுங்குப் படுத்தலில் கடந்த 15ம் திகதி யன்று தீப்பந்த ஊர்வலம் இடம் பெற்றுள்ளது.

தேசிய எழுச்சிப்பேரவை செயலாளர் விக்கினேஸ்வரன் தலைமையில் கள்ளப்பாடு ஆதிவைரவர் ஆலயமுன்றலில் இரவு 7.00மணிக்கு ஆரம்பித்த ஊர்வலம் சித்திரை இரண்டிலே நித்திரை கொள்ளாதே, பொன்னான வாக்கினை கண்ணாக மதியுங்கள், எரியும் தீப்பந்தம் போல் எழட்டும் உங்கள் உணர்வுகள் எனும் கோசங்களை ஒலித்தவாறு கூட்டமைப்புக்கு சார்பாக வீட்டுச்சின்னத்திற்கு நேரே புள்ளடியிடுங்கள் என உரத்தகோசம் இட்டவாறு தீப்பந்தங்களுடன் ஊர்வலம் அந்தோனியார் ஆலய முன்றலில் முடிவடைந்தது.

மேற்படி ஊர்வலத்தில் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், பொதுஅமைப்பு சார்ந்தவர்கள் என பெருந் தொகையானோர் கலந்து கொண்டனர். (ஆ)

# முன்பள்ளி கல்விமேம்பாட்டு நிலைய நிர்வாக சபைத் தெரிவு

முல்லை வலய,முல்லைத்தீவு மாவட்டத்திற்கான முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தின் 2004ம் ஆண்டிற்கான நிர்வாக சபைத் தெரிவு எதிர்வரும் 25ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.00மணிக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழக முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. இதில் பிரதேச முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தின் நிர்வாகம்,முன்பள்ளி கல்விமேம்பாட்டு நிலைய முல்லை,துணுக்காய் வலய நிர்வாகம், முன்பள்ளிகளை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்கள்,

தமிழர் புனர்வாழ்வுக்கழகம், வடக்கு-கிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்விமேம்பாட்டு நிலையம், கல்வித் திணைக்களம் ஆகியன இணைந்து மேற்படி நிர்வாகம் அமைக்கப்படவுள்ளது. எனவே குறிப்பிட்ட திகதியில் உத்தியோகத்தர்களைக் கலந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (26)

# அரசியல் கருத்தரங்கு

சமகால அரசியல் கருத்தரங்கு நேற்று மாலை 7.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு மண்டபத்தில் கிளிநொச்சிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் த. நிருபன் தலைமையில் நடைபெற்றது.

சமகால அரசியல் கருத்துக்களை, கிளிநொச்சி மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் செ. முரளி, கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தி. முரளி, அரசியல்துறையைச் சேர்ந்த சஞ்சேய், கிளி. மாவட்ட தொழில்நுட்ப கல்வி நிறுவன அதிபர் தி. பிரபாகரன், கிளி. மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் பூவிழி, நிர்வாக சேவையைச் சேர்ந்த மணியண்ணன் ஆகியோர் நிகழ்த்தினார்.

# சுருக்கிட்டு தற்கொலை

மல்லாவி மூன்றாம் யுனிட்பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் தமது வீட்டில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார். நேற்றுக்காலை 8.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உழவு இயந்திரத்திருத்துனரான பொன்னையா தர்மலிங்கம் (வயது 39) என்பவரே தற்கொலை செய்து கொண்டவராகும். இவர் மூன்று பிள்ளைகளின் தந்தையார் ஆவார்.

மல்லாவி மாவட்ட நீதியாளர் இளங்கதிர் ஸ்தலத்திற்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டுள்ளார். துணுக்காய் காவல்துறையினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (24)


## 3ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்

14 □ 07 □ 1942



ஆண்டவன் அடியில்

28 □ 03 □ 2001

### திருமதி மகாலிங்கம் கிருஸ்ணவேணி (பராசக்தி)

இல. 766, கட்சன்வீதி, வட்டக்கச்சி.

*அன்பெனும் சிறகினால் எமையெல்லாம் அரவணைத்தீரே. ஆறவில்லை எம்இதயம் ஆண்டுகள் மூன்று சென்றாலும் அன்பு எனும் பாசவலை பின்னலில் சிக்கி எம்மைத் தவிக்கவிட்டுச் சென்ற பாசமலரே அம்மாவே. உம் நினைவுகள் நீங்காதம்மா.*

*உம் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

தகவல் :-
மருமகள்-துரை
வானலை தொழில் நுட்பவியலகம்,
155ஆம் கட்டை,
கிளிநொச்சி.

கணவன், மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(4338)

## பெயர்மாற்றம்

மட்டுவில் நாடு பூநகரியைச்சேர்ந்த தற்போது மருதானையில் வசித்து வரும் பற்றிக்சேவியர் ஆகியநான் 24.01.2004 இல் இருந்து என் பெயரை அருள்பிரகாசம்பாலன் என்று மாற்றிக்கொள்கின்றேன் என்பதை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறிவித்துக் கொள்வதோடு இனிமேல் சகல ஆவணங்களிலும் அ.பாலன் என்று கையொப்பம் இருவேன் என்று உறுதியளிக்கின்றேன்.

தகவல்:
அ.பாலன்.

(4337)

## பழையமாணவர்சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் 2004

மு/புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய பழையமாணவர்சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2004 எதிர்வரும் 11.04.2004 பி.ப.3.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இக்கூட்டத்தில் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். கூட்டத்திற்கு சமுகளிக்கும்போது இவ்வருடத்திற்கான சந்தாப்பணம் ரூ.50/= ஐ செலுத்தி உறுப்புரிமை பெற்றுக்கொள்ளவும்.

செயலாளர்
ப.மா.ச, பு.ம.வி.

(சி-7175)

## ஆங்கில ஆசிரியர்கள் தேவை

மு/புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்திற்கு தரம் 6-13 வரையான வகுப்புக்களிற்கு ஆங்கிலம் கற்பிப்பதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை 15.04.2004இற்கு முன் அதிபர் மு/புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம் புதுக்குடியிருப்பு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். நேர்முகத் தேர்விற்கு தனித்தனி அறிவித்தல் வழங்கப்படும்.கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

அதிபர்,
மு/புதுக்குடியிருப்பு ம.வி.

(சி-7174)

# ஹமாஸ் இயக்கத் தலைவர் படுகொலைக்கு பழிவாங்க இஸ்லாமிய அமைப்புக்கள் தயார்!

## -அமைதி பேண அமெரிக்கா வேண்டுகை

**பலஸ்தீனத்தின் ஹமாஸ் இயக்கத்தலைவர்ஷேக் அகமத் யஷீன் இஸ்ரேலிய உலங்கு வானூர்தியின் ரொக்கற் தாக்குதலுக்கு இலக்காகி மரணமானதையடுத்து அதற்குப் பழிவாங்கப் போவதாக இஸ்லாமிய தீவிரவாதக் குழுக்கள் சூளுரைத்துள்ளமையினால் பிராந்தியத்தின் பாதுகாப்பிற்கு உலகளாவிய ரீதியில் அச்சநிலை உருவாகியுள்ளது.**



காஸா நகரில் இஸ்ரேலிய உலங்கு வானூர்தியின் தாக்குதலில் இஸ்லாமிய ஹமாஸ் தலைவர் கொல்லப்பட்டதைக் கண்டித்து மேற்குக்கரை நகரில் ஆர்ப்பாட்டம் நடத்தும் அவரது ஆதரவாளர்கள்.

ஹமாஸ் மாத்திரமன்றி யசீர் அரபாத்தின் இயக்கத்தைச் சேர்ந்த அல்அக்ஸா மாவீரர் படையணியும் விரைவில் கடும் தாக்குதல் நடத்தப் போவதாக எச்சரித்துள்ளன.

மேலும் ஹமாஸ் இயக்கத் தலைவரான ஜஷீனை படுகொலை செய்தமைக்காக அமெரிக்காவையும் இஸ்ரேலையும் பழிவாங்கப் போவதாக இஸ்லாமியர் குழு ஒன்று எச்சரிக்கை செய்துள்ளது.

அபுஹக் அல் மஜ்ரி என்ற படையணியே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

இந்த அமைப்பு இந்த எச்சரிக்கையினை அதன் இணையத்தளம் ஊடாகவே வெளியிட்டுள்ளதாகவும்,

அண்மையில் ஸ்பெயினில் நடந்த தொடர் ரயில் குண்டு வெடிப்பிற்கும் இதே அமைப்பே உரிமைகோரி உள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மத்திய கிழக்கு நிலைமை குறித்து தீவிர கவலை கொண்டுள்ளதாக அமெரிக்க சனாதிபதியின் நிர்வாகம் அறிவித்துள்ளது.

அமெரிக்கா இந்தப் படுகொலையைக் கண்டிக்காத போதிலும் பிராந்தியத்தில் அமைதியைப் பேணுமாறு புஷ் நிர்வாகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஆனாலும் பயங்கரவாதக் குழுக்களிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் உரிமை இஸ்ரேலுக்கு உண்டென்றும் அது கூறியுள்ளது.

### ரொக்கற் தாக்குதல்!

ஹமாஸ் இயக்கத் தலைவர் ஜஷீனின் படுகொலையை அடுத்து பலஸ்தீன தீவிரவாதிகள் காஸாப் பள்ளத்தாக்கில் இருந்து இஸ்ரேலுக்குள் ரொக்கற் தாக்குதலை நடத்தியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



ஹமாஸ் இயக்கத்தலைவரின் இறுதிக்கிரியையில் கலந்து கொள்ளச் செல்லும் பலஸ்தீனர்கள் ஆயுதங்களுடன்..

# புஷ்சிற்கு எதிரான விமர்சனம்; வெள்ளை மாளிகை நிராகரிப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் சனாதிபதியை விமர்சித்த வெள்ளை மாளிகையின் முன்னாள் அதிகாரி றிச்சேட் கிளார்க்கின் குற்றச்சாட்டினை வெள்ளைமாளிகை நிராகரித்துள்ளது.

இவர் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷின் தோற்றப்பாட்டிற்கு களங்கம் ஏற்படுத்தும் விதத்தில் அரசியல் நோக்கத்துடன் செயற்பட்டு வருவதாகவும் வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

அமெரிக்காவில் நீண்டகாலம் பயங்கரவாதத்தடுப்பு நடவடிக்கைகள் பற்றி ஆலோசனை வழங்கியவர் கிளார்க் எனவும், இவர் அண்மையில் பதவிவிலகியமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அமெரிக்காமீது செப்ரெம்பர் பதினோராந்திகதி நடத்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பான அச்சுறுத்தலை சனாதிபதி கவனிக்கவில்லை என்பதே இவரது குற்றச்சாட்டாகும்.

சனாதிபதி தேர்தல் பிரசாரம் சூடுபிடித்த தருணத்தில் இந்தக் குற்றச்சாட்டு வெளியாகியுள்ளது.

# 'எயிட்ஸ்' சர்வதேச மாநாடு ஜூலையில் நடைபெற ஏற்பாடு

தாய்லாந்தில் எயிட்ஸ் தொடர்பானசர்வதேசமாநாடுவரும் ஜூலை மாதம் நடைபெறவுள்ளது.

உலகெங்கிலும் உள்ள கோடிக்கணக்கான எயிட்ஸ் நோயாளிகளுக்கு துரிதமாகத் தடுப்பு மருந்துகளை வழங்கும் முயற்சியில் எயிட்ஸ் நோய்க்கு எதிரான போராட்டத்தில் ஆசியாவில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்பன மாநாட்டில் முக்கிய இடம் பெறும் எனவும் ஏற்பாட்டாளர்கள் கூறுகின்றனர்.

உலகெங்கிலும் நான்குகோடி மக்களைப் பாதித்திருக்கும் எயிட்ஸ் நோயைக்கட்டுப்படுத்துவதற்கு கோடிக்கணக்கான டொலர்களை வழங்கப் போவதாக சர்வதேச சமூகம் உறுதிவழங்கியுள்ளது.ஆனால் அதற்கான மருந்துப் பொருட்களைக் கொள்வனவு செய்யக் கூடியவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவானதாகவே உள்ளது.



பெல்ஜியத்தில் கிராண்ட்பிரிக்ஸ் உலகக்கிண்ணத்துக்கான உந்துருளிப் போட்டியின் முதல் சுற்றில் கலந்து கொள்ளும் போட்டியாளர்கள்.

## உலக சாதனையாளர் பரிதாப மரணம்!

கொடிய விசப்பாம்புகளுடன் அதிக நாட்கள் வாழ்ந்து உலக சாதனை படைத்தவர் இறுதியில் நாகபாம்பு ஒன்று தீண்டியதால் மரணமடைந்துள்ளார்.

இவர் நாளாந்தம் நடத்திவரும் பாம்பாட்டி நிகழ்ச்சியின் போதே இவருக்கு இந்த நிலை ஏற்பட்டது.

ஏற்கனவே இவர் ஒரு வலிப்பு நோயாளி எனவும், இவருக்கு நாகம் தீண்டியதால் வாயில் நுரைகக்க நிலத்தில் வீழ்ந்த சமயம் அவருக்கு வலிப்பே ஏற்பட்டுள்ளதாகப் பார்வையாளர்கள் கருதியுள்ளனர். அதனாலேயே அவருக்கு பாம்பு தீண்டியதால் தான் இவ்வாறு நிகழ்கிறது என்பது தெரியாத நிலையில் அவர் மரணத்தைத் தழுவிக் கொண்டார்.

# வியட்னாம் கடலில் சட்டவிரோத மீன்பிடி 8வெளிநாட்டுக் கப்பல்கள் தடுத்து வைப்பு

வியட்னாம் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்துக் கொண்டிருந்த வெளிநாட்டு மீன்பிடிக்கப்பல்களை வியட்னாம் அதிகாரிகள்சுற்றிவளைத்து தடுத்து வைத்துள்ளனர்.

வியட்னாமிற்குத்தெற்கே உள்ளகடற்பரப்பிலேயே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. இதன் போது எட்டுவெளிநாட்டுக்கப்பல்களையும் அதன்மாலுமிகளையும் வியட்னாம் அதிகாரிகள் சுற்றிவளைத்து தடுத்து வைத்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 40பேர் தாய்வானைச் சேர்ந்தவர்கள் எனவும் 20பேர் மியன்மார் பிரஜைகள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் விசாரிக்கப்படுவதாகக் குறிப்பிட்டவியட்னாம் இவர்களை எங்கே தடுத்து வைத்துள்ளது என்பதைக் கூற மறுத்துள்ளது.



காஸாவில் இஸ்ரேலிய உலங்கு வானூர்தியின் தாக்குதலில் ஹமாஸ் தலைவர் கொல்லப்பட்டதைக் கண்டித்து ஜோர்தானின் தலைநகர் அம்மானில் நடைபெறும் ஆர்ப்பாட்டம்.

# மதவாதக் கட்சிகளிடம் நாட்டை ஒப்படைக்காதீர்

## -கலைஞர் வேண்டுகோள்

(சென்னை)

மதவாதக் கட்சிகளிடம் நாட்டை ஒப்படைக்கக் கூடாது என்று தி.மு.க.தலைவர் கருணாநிதி மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று காஞ்சிபுரத்தில் தேர்தல் பிரச்சாரத்தின் போது பேசிய கருணாநிதி இரத்த ஆறு ஓட மதவாதக்கட்சிகள் ஆட்சி ஏற்குமானால், மக்களுக்கு நிம்மதி கிடைக்காது என்று கூறியுள்ளார்.

தற்போது நாடு மதவாதிகளின் கையில் போகும் நிலையில் இருக்கின்றது. டான்சி வழக்கில் ஜெயலலிதா தனது மனச்சாட்சிக்கு மதிப்பு கொடுக்கவேண்டும் என்று உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது. அதனால் ஜெயலலிதா இதுபோன்ற ஊழல்களில் ஈடுபடாதவாறு அவரை இந்தத் தேர்தலிலாவது திருத்த வேண்டும் என்று கூறியுள்ளார்.

# விஸா கிடைக்காததால் விரக்தியுற்ற இளைஞர் 16 – வது மாடியிலிருந்து தற்கொலை முயற்சி!

## சியோலில் நடந்த அதிர்ச்சி சம்பவம்

(சியோல்)

தென்கொரியாவில் வெளிநாடு செல்வதற்கு விஸா கிடைக்கவில்லை எனும் விரக்தியில் 16 மாடி கட்டடத்திலிருந்து குதித்த இளைஞன் ஒருவர் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பியுள்ளார்.

வேலைதேடி அமெரிக்கா செல்ல விண்ணப்பித்த இளைஞனுக்கு விஸா வழங்க அமெரிக்கத் தூதரகம்மறுத்துவிட்டது. விரக்தியடைந்த இளைஞன் சியோலிலுள்ள 16 மாடி அமெரிக்கத் தூதரகக் கட்டடத்திலிருந்து குதித்துள்ளார்.

இதனையடுத்துப் பொலிசார் கீழே மெத்தைகளை விரித்து இளைஞனைக் காப்பாற்றியுள்ளார்கள். இருந்தபோதும் மெத்தையில் விழுந்த இளைஞர் வழுக்கித் தரையில் விழுந்தமையினால் சிறு காயம் ஏற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்நபரை பொலிசார் கைது செய்யவுள்ளார்கள்.

# கடந்த வாரத்தில்...

## 15.03.2004 – 21.03.2004



அன்னை பூபதி நினைவு நாள்

15 * குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பாக யுனெஸ்கோ நிறுவன ஆசிய-பசுபிக் ஆலோசகர் தார்ஜா வைர்த தனன் யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையப்பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடினார்.

* ஐ.தே.க. தேர்தல் விஞ்ஞாபனம் ஜே.ஆர்.ஜயவர்த்தனா கலாச்சார நிலையத்தில் இடம்பெற்ற வைபத்தில் தவிசாளர் மலிக்சமர விக்கிரமவினால் பிரதமரிடம் கையளித்து வெளியிடப்பட்டது.

* ஜாதிக ஹெல உறுமயவின் வேட்பாளர்களான பிக்குகள் பௌத்த கொடிகளையும் சுலோகங்களையும் பிரசார நடவடிக்கைகளில் பயன்படுத்துவதை தடை செய்யக்கோரி ருக்மலே தம்ம கீர்த்தி ரத்ன தேரர் தலைமையிலான பிக்குகள் தேர்தல் ஆணையாளரிடம் மகஜர் கையளித்தனர்.

* பலஸ்தீனத்திலிருந்து இஸ்ரேல் பிரிந்து செல்வதற்கு இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் மேற்கொண்ட திட்டத்திற்கு இஸ்ரேல் பாராளுமன்றம் அங்கீகாரம் வழங்கியது.

* வடக்கு ஈராக்கில் மொசூல் என்ற இடத்தில் நிவாரணப்பொருள் விநியோக நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மூன்று அமெரிக்க சிவிலியன்கள் சுட்டுக்கொலை.

16.* அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தனது 500வது விக்கெட்டை வீழ்த்தி டெஸ்ட் அரங்கில் 500 விக்கெட்டுகளுக்கு மேல் வீழ்த்திய 3வது வீரராகத் தன்னை இணைத்துக் கொண்டார் சுழல் பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரன்.



சாதனை வீரன்

* ஐரோப்பிய தேர்தல் கண்காணிப்புக்குழுவினர் மட்டக்களப்பிற்குச் சென்று தேர்தல் தொடர்பாக கூட்டமைப்பு முதன்மை வேட்பாளர் ஜோசப் பரராஜ சிங்கத்தைச் சந்தித்து கலந்துரையாடினர்.

* ஊர்காவற்துறையின் புளியங்கூடல் சந்திப் பகுதியில் அரசியல் பணிகளில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகள் அமைப்பின் பெண்போராளிகள் த.மதன ராஜா தலைமையிலான ஈ.பி.டி.பி. உறுப்பினர்களால் அச்சுறுத்தப்பட்டனர்.

* இந்தியாவில் காங்கிரஸ் தலைவர்கள் பயணம் செய்த ஹெலிகொப்ரர் தரையிறங்கும் போது வெடித்துச் சிதறியது. பயணம் செய்தோர் காயங்களுடன் உயிர்தப்பினர்.

* இந்திய, பாகிஸ்தான் நாடுகளுக்கிடையில் சமாதானத்தை முன்னெடுக்கும் வகையில் சமாதானப் பேச்சு வார்த்தையில் ஈடுபட அமெரிக்க இராஜாங்க செயலர் கொலின்பவல் புதுடில்லி விஜயம்.

* ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் பழங்குடி இனத்தவர்களுக்கும், பாகிஸ்தான் படையினருக்கும் இடையிலான மோதலில் 8 பாகிஸ்தான் படையினரும், 24 பழங்குடி இன தீவிரவாதிகளும் கொல்லப்பட்டனர்.

17* ரஷ்யாவின் வடக்கே ஒன்பது அடுக்கு மாடிக்கட்டடத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் இரண்டு குழந்தைகள் 39 பேர் உயிரிழப்பு.

* ஈராக்தலைநகரான பாக்தாத்தின் மத்திய பகுதியில் அமைந்திருந்த ஹோட்டல் ஒன்றின் மீது நிகழ்ந்த கார்க் குண்டுத் தாக்குதலில் 27 ஈராக்கியர்கள் பலி, வெளிநாட்டவர் உட்பட 40 பேர் காயம்.

18 *கொசோவாவில் சேபியர்களுக்கும், அல்பேனிய இனத்தவர்களுக்கும் இடையேஇடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் 22பேர் பலி 500ற்கும் மேற்பட்டோர்காயம்.

19 * தமிழீழம் எங்கும் அன்னை பூபதி நினைவு நாள் உணர்வெழுச்சியுடன் ஆரம்பம்.

* தாய்வான் சனாதிபதி ஷென் சூய் பியான், உபசனாதிபதி அனெட்டு அம்மையார் ஆகியஇருவரும் தாய்வானின் தென் பகுதி நகரான ரைபனில் வைத்து சுடப்பட்டனர்.

* பிரிட்டனிடமிருந்து இந்திய விமானப் படைக்கு 6 ஆயிரம் கோடிரூபா செலவில் 66 நவீன ஹோர்க் போர் விமானங்கள் கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தத்தில் இந்தியாவின் சார்பில் பாதுகாப்புத்துறை செயலாளர் அஜய்பிரசாத்தும், பிரிட்டனின் சார்பில் புதுடில்லியில் உள்ள பிரிட்டன் தூதுவர்மைக் கல் ஆர்தரும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

20 *அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்த இலங்கைக்கான நெதர்லாந்துத் தூதரகத்தின் முதலாவது செயலாளர் ஜான்டு வேல் கென், பேராசிரியர் ஜோர் ஜீ.ஈ.. பிரோக், கலாநிதி சிறில்வான் புரோக் ஆகியோர் சமகால அரசியல் விடயங்கள், பொதுத்தேர்தல், கிழக்கில் ஏற்பட்டுள்ள நிலை ஆகியன தொடர்பாக கலந்துரையாடினர்.



நெதர்லாந்து அதிகாரிகளுடன்...

* ஈராக் போர் ஆரம்பித்து ஓராண்டு நிறைவையொட்டி உலகெங்கும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.





போருக்கெதிரான ஆர்ப்பாட்டம்

21 *மூதூர் கிழக்கு சம்பூரில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் துறை அலுவலகத்தில் வைத்து திருகோணமலையுனிசெப் பிரதிநிதிகளிடம் 35 சிறுவர்கள் ஒப்படைக்கப்பட்டனர்.



சிறுவர்கள் ஒப்படைப்பு

* கிளி. மருத்துவமனையின் யுத்தகால அழிவை நினைவு கூர்ந்து அமைக்கப்பட்ட தூபி திறக்கப்பட்டது.



யுத்தகால நினைவுத் தூபி

* கிளி.மாவட்ட மருத்துவ சங்கம் அங்குரார்ப்பணம்

# சிற்றூழியர்களைச் சீருடையில் பணியாற்ற மாகாணக் கல்வியமைச்சு கடும் உத்தரவு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கீழ் வரும்கல்வி அலுவலகங்களிலும் பாடசாலைகளிலும் சிற்றூழியர்களாகக் கடமையாற்றுவோர் கடமை நேரத்தில் தமக்குரிய சீருடைகளிலேயே பணியாற்ற வேண்டும் என்று மாகாணக்கல்வி அமைச்சு கண்டிப்பான உத்தரவு பிறப்பித்துள்ளது.

வருடாவருடம் கல்வி அமைச்சின் கீழுள்ள சிறுபணியாளர்களின் சீருடைக்காக இலட்சக் கணக்கான ரூபாய்கள் செலவு செய்யப்படுகின்ற போதிலும் குறிப்பிட்ட ஊழியர்கள் சீருடைக்கான பணத்தைப் பெற்றுக்கொண்டு உரிய சீருடையை அணியாது கடமையாற்றுகின்றார்கள் என்று கண்டறியப்பட்டுள்ளதையடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அலுவலகங்களிலும், பாடசாலைகளிலும் சிறுபணியாளர்கள் தமக்குரிய சீருடையை அணியாது கடமை செய்வதினால் சிற்றூழியர்களையும், ஏனைய ஊழியர்களையும் இனங் காண்பது சிரமமான காரியமாக உள்ளதாக கல்விஅமைச்சுக்கு முறைப்பாடுகள் கிடைத்து வரு வதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

# மன்னார் மாவட்டத்திலும் கொத்தணி வாக்குச் சாவடி

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிமக்கள் வாக்களிப்பதற்கு தன்னா மோட்டையிலும், மடுவீதியிலும் கொத்தணி வாக்குச்சாவடிகள் அமைக்கப்படவுள்ளன.

இதேபோல மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர்பிரிவிலுள்ள மக்கள் தன்னா மோட்டை தமிழ்க்கலவன் பாடசாலையில் 12 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

மடு வீதியில் அமைக்கப படவுள்ள வாக்குச்சாவடிகள் பண்டிவிரிச்சான், தச்சனா மருதமடு, பாலம்பிட்டி மக்கள் வாக்களிப்பதற்காக நிறுவப்படுகின்றன.(பி)

# பொதுத்தேர்தல் கண்காணிப்பு பணிக்கு ஜப்பானுக்கும் அழைப்பு

(கொழும்பு)

நடக்கவிருக்கும் சிறிலங்கா பொதுத்தேர்தலைக் கண்காணிப்பதற்காக ஜப்பானில் இருந்தும் கண்காணிப்புக் குழு ஒன்றுவரவுள்ளது.

சிறிலங்காவின் தேர்தல் ஆணையாளர் விடுத்த வேண்டுகோளை அடுத்து ஜப்பானிய கண்காணிப்பாளர்கள் சிறிலங்காவிற்கு வருவது இதுவே முதல் தடவையாகும்.

இது பற்றி சிறிலங்காவிற்கான ஜப்பானியத் தூதரகம் விடுத்த அறிக்கையில், சிறிலங்காவின் சனநாயக சமாதான நடைமுறைகளை வலுப்படுத்தும் ஜப்பானிய முயற்சிகளின் ஒரு கட்டமாக அவதானிகள் அனுப்ப டுவதாக அது குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை பொதுநலவாய தேர்தல் கண்காணிப்பாளர்கள் ஏற்கனவே சிறிலங்காவிற்கு விஜயம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆங்கிலத்தைப் போதிக்க நூலக வசதிகள்

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் மத்திய கல்வி அமைச்சின் உதவியுடன் அமுல் செய்யப்படவுள்ள " பொப்லெப்" திட்டத்தின் கீழ் 725 பாடசாலைகளில் ஆங்கிலப் பாடத்தைக் கற்பிப்பதற்காக நூலக வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாகாணக்கல்வித்திணைக்கள உயரதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

# பௌத்த சிங்களவரின் பாதுகாப்பை உறுதிசெய்ய ஐ.ம.சு.முன்னணிக்கே வாக்களிக்க வேண்டும்

## -மகிந்த ராஜபக்ஷ கூறுகின்றார்

(கொழும்பு)

எமது பௌத்த நாட்டில் பௌத்த சிங்கள மக்களின் பாதுகாப்பினை உறுதி செய்ய வேண்டுமானால் எதிர்வரும் பொதுத்தேர்தலில் மக்கள் அனைவரும் வெற்றிலைச் சின்னத்துக்கே வாக்களித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை அமோக வெற்றியடையச் செய்யவேண்டும் இவ்வாறு முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அம்பாந்தோட்டை மாவட்ட வேட்பாளருமான மகிந்த ராஜபக்ஷ ஞாயிற்றுக்கிழமை கூறியுள்ளார்.

ஐக்கியதேசியக் கட்சியின் புரிந்துணர்வு உடன்படிக்கை காரணமாக, புலிகள் இன்று உலக அளவில் பெரும் நன்மதிப்பைப் பெற்றுள்ளதுடன், அவர்களையும் உலகம் ஏற்றுக்கொண்டுள்ளது. இதேவேளை, தென்பகுதியிலுள்ள இயற்கை வளங்கள் அனைத்தும் வெளிநாட்டு வர்த்தகர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.விடுதலைப் புலிகள்தனிநாடு ஒன்றை அமைக்கும் அதே வேளை, தென்பகுதி மக்களுக்கு உரித்துடையவளங்களையும்,காணிகளையும் வெளிநாட்டினர் கொள்முதல் செய்து கொள்ளையடித்துவிடுவர். இறுதியில் இந்த சிங்களத் தாய் நாட்டின் பௌத்த மக்கள் நிம்மதியாக சுதந்திரமாக வாழ முடியாது கூலிவீடுகளில் வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டு விடும்.

வடபகுதியில் புலிகள் தனியான நீதிமன்றம், பொலிஸ் நிலையம், வங்கிகள் என்பவற்றை ஏற்படுத்தி யுள்ளனர். ஒரேநாட்டில் இருவேறு நீதிமன்றங்கள், சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. சிங்கள மக்களின் அர்ப்பணிப்புடன் பாதுகாக்கப்பட்ட உரிமைகள் பறிக்கப்படுகின்றன. என்றும் அவர் கூறினார்.

# ரொபி உட்கொண்ட மாணவர்கள் மயக்கம்

இரத்தினபுரி கஹவத்த மத்திய மகாவித்தியாலயத்தில் ரொபி சாப்பிட்ட25 மாணவர்கள் மயக்கமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.வகுப்பு மாணவியொருவர் தனது பிறந்த தினத்தை முன்னிட்டு சக மாணவிகளுக்கு ரொபி கொடுத்துள்ளதையடுத்து, அதனைச் சாப்பிட்ட மாணவிகள் உடலெங்கும் அரிப்பு ஏற்பட்டு மயக்கம் அடைந்துள்ளனர்.

# தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டம் நிறைவேறும் காலம் நெருங்கி விட்டது

## -முதன்மை வேட்பாளர் இரா.சம்பந்தன்

(திருமலை)

**'வீடு' சின்னத்தில் ஆரம்பமான தமிழ் பேசும் மக்களின் விடுதலைப்போராட்டம் 'வீடு' சின்னத்துடன் நிறைவேறும் காலம் வந்துவிட்டது. விடுதலைப்புலிகளின் பூரண ஆதரவு மற்றும் வழிகாட்டலின் கீழ் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு எதிர்வரும் தேர்தலைச் சந்திக்கின்றது. இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகமும் திருமலை மாவட்ட முதன்மை வேட்பாளருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.**

. நேற்று முன்தினம் நண்பகல் திருமலை பத்தாம் குறிச்சிப்பகுதியில் தமிழரசுக்கட்சி தேர்தல் அலுவலகத் திறப்பு நிகழ்வில் பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

திருமலை மாவட்ட தமிழரசுக் கட்சி வேட்பாளர்களில் ஒருவரான எஸ்.கௌரிமுகுந்தன் அலுவலகத்திறப்பு நிகழ்வில் ஆரம்பவுரை நிகழ்த்தினார். ஆரம்பத்தில் அலுவலகத்தை முன்னாள் எம்.பி.சம்பந்தன், முன்னாள் எம்.பி.யும் வேட்பாளருமான க.துரைரட்ணசிங்கம், வேட்பாளர் கௌரிமுகுந்தன் சகிதம் திறந்து வைத்தார். இது சாதாரண தேர்தல் அல்ல; விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரக் கட்டமைப்பை உருவாக்குவதற்கான ஆணையை வழங்கும் தேர்தல் இது.

இராணுவ நடவடிக்கை மூலம் விடுதலைப்புலிகள் இயக்கத்தை அடக்கி அழிக்க முடியாது என்பதை உணர்ந்து சிங்கள அரசுகள் சமாதானப் பேச்சுவார்த்தை மூலமே தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்பதை உணர்ந்து கொண்டன. அதன் விளைவுதான் ரணில் தலைமையிலான அரசு விடுதலைப் புலிகளுடன் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைச் செய்துகொண்டது. யுத்த நிறுத்த உடன்படிக்கை இரு தேசிய இனங்கள் சம அந்தஸ்து அடிப்படையில் செய்துகொண்ட உடன்படிக்கையாகும். சமாதானப் பேச்சுவார்த்தையின் ஒரு கட்டமாக விடுதலைப்புலிகள் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக் கட்டமைப்பு முன்மொழிவை முன்வைத்தது என்று சொன்னார்.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரக் கட்டமைப்பில் இஸ்லாமிய மக்களும் சமபங்காளிகளாகப் பணியாற்ற முன்வர வேண்டும். எந்த அரசு தேர்தலின் பின்னர் வந்தாலும் வடக்கு கிழக்குக்கு என்று இடைக்கால தன்னாட்சி அதிகார சபை ஒன்றை வழங்கியேயாக வேண்டிய நிலை வந்துவிட்டது.ஒருஇனம் மற்றைய இனத்தைப் பாரபட்சமாக நடத்தியதால்தான் நாட்டிற்கு பேரழிவு ஏற்பட்டது.

வடக்கு கிழக்கில் தமிழ், முஸ்லிம் மக்கள் பிரிந்து வாழ முடியாது. வடக்கு கிழக்கு மக்கள் வளமாக, சுபீட்சத்துடன் வாழ்வதற்கு தமிழ்,முஸ்லிம் மக்களின் ஒற்றுமை அவசியம் என்றும் சம்பந்தன் தெரிவித்தார். (25)

### சுவரொட்டிகள் அகற்றல்

மன்னாரில் தேர்தல் சுவரொட்டிகள் நேற்றுமுன்தினம் முதல் அகற்றப்படுகின்றன. தேர்தல் சட்டத்திற்கு விரோதமானவகையில் இச்சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருப்பதாக தெரிவித்தே இச்சுவரொட்டிகள் அகற்றப்பட்டு வருகின்றன. (மி)

# அம்பாறை மாவட்டத்திலேயே அதிகளவு தேர்தல் வன்முறைகள்

நேற்றுமுன்தினம் காலை 6 மணியுடன் முடிவடைந்துள்ள 24 மணித்தியாலங்களுக்குள் நாடளாவிய ரீதியில் தேர்தல் வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகள் 45 கிடைக்கப் பெற்றுள்ளதாக பொலிஸ் தலைமைக் காரியாலயத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது. அதேவேளை, வேட்புமனுக்கள் கையளிக்கப்பட்டதன் பின்னர் இதுவரை 752 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது. ஆகக் கூடிய முறைப்பாடுகள் அம்பாறை மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளன. இரண்டாவது ஆகக் கூடிய முறைப்பாடு அநுராதபுரத்தில் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (32)

# ஹெல உறுமய வேட்பாளரான பிக்குமீது 20 பேர் கொண்ட குழு தாக்குதல்

(கொழும்பு)

ஹெல உறுமயவின் கம்பஹா மாவட்ட தேர்தல் வேட்பாளரான பௌத்த பிக்கு சாகரதிஸ்ஸ என்பவர் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

கடந்த ஞாயிறன்று இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது கம்பஹா மாவட்டத்தின் கட்சி ஒன்றின் ஆயுதம்தாங்கிய 20 பேர் இந்த தாக்குதலை நடத்தியுள்ளனர். தாக்குதலுக்கு உள்ளான பௌத்த பிக்கு தற்சமயம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். அண்மையிலும் ஹெல உறுமய நீர்கொழும்பு மாவட்ட வேட்பாளரான பௌத்த பிக்குக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (32)

# திருடப்பட்ட வோக்மன் துரித நடவடிக்கையில் மீட்பு!

## - சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜர்

(அலுவலக செய்தியாளர்)

வோக்மன் திருடப்பட்ட சம்பவம் குறித்து முறைப்பாடு தெரிவிக்கப்பட்ட சில மணி நேரத்திலேயே தமிழீழக் காவல்துறையினரால் அது மீட்கப்பட்டது.

மேற்படி சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை துணுக்காய் பிரதேசத்தில் இடம்பெற்றது. மேற்படி சம்பவம் குறித்து துணுக்காய் காவல் பணிமனையில் முறைப்பாடு செய்யப்பெற்றதைத்தொடர்ந்து துணுக்காய் காவல்துறையினர் துரித நடவடிக்கையினை மேற்கொண்டதன் விளைவாக சம்பவம் நடைபெற்றசில மணிநேரத்தில் வோக்மன் மீட்கப்பட்டதுடன் சந்தேக நபரையும் கைது செய்து விசாரணைக்குட் படுத்தியதுடன் சந்தேக நபர் காவல்துறையினால் நேற்று முன்தினம் மல்லாவி நீதிமன்றில் முற்படுத்தப்பெற்றுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. (சோ)

# பழைய மாணவர்களால் மதில்சுவர் நிர்மாணிப்பு

(மல்லாவி)

மு/மல்லாவி மத்திய கல்லூரியின் வெளிநாட்டில் வதியும் அதன் பழைய மாணவர் மூவரால் தமது தந்தையான பரமசாமி நினைவாக கல்லூரியின் முன்புறத்தில் நிர்மாணிக்கப்பட்ட மதில்சுவர் அண்மையில் பழைய மாணவர்சங்க பொருளாளரும் நூலகருமான செல்வி பா. ருஜினா தலைமையில் நடந்த நிகழ்வில் கையளிக்கப்பட்டது.

மங்கல விளக்கினை கோட்டக் கல்வி அலுவலர் ஆ.சுந்தரமூர்த்தி, மற்றும் மத்திய கல்லூரி அதிபர் திருமதி தேவராசா ஏற்றிவைக்க தேசியக் கொடியை துணுக்காய் பிரதேச அரசியல் துறை பொறுப்பாளர் த.தர்மேந்திரா ஏற்றிவைத்தார்.

புதிதாக அமைக்கப்பட்ட மதில்சுவரை திருமதி பரமசாமி அவர்களால் திரை நீக்கம் செய்யப்பட்டது.

இந் நிகழ்வில் பாராட்டுரைகளை அரசியல்துறைப் பொறுப்பாளர் த.தர்மேந்திரா மத்திய கல்லூரி அதிபர் ஆகியோர் வழங்கினர். (24)

# பட்டலந்த சித்திரவதை முகாம் வழக்கை உடன்தொடர சனாதிபதி நிர்ப்பந்தம்

(கொழும்பு)

பட்டலந்த சித்திரவதை முகாம் தொடர்பான வழக்கின் பிரதான எதிரியின் வாக்குமூலம் பற்றிய விசாரணைகளை ஆரம்பிக்குமாறு குற்றவியல் புலன் விசாரணை திணைக்களத்திற்கு கூறப்பட்டுள்ளது.

முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டகளஸ் பீரிஸ் 2000ஆம் ஆண்டு தெரிவித்த முறைப்பாடுகள் பற்றிவிசாரணைகளை ஆரம்பிக்குமாறு பொலிஸ்மா அதிபர் இத் திணைக் களத்திற்கு தெரிவித்துள்ளார். பிரதான எதிரியின் வாக்கு மூலத்தில் இரண்டு முக்கிய விடயங்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று நடிபிரியந்த என்பவர் ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவிற்கமைய வழக்கறிஞர்கள் தயாலங்கபுர, காற்சன அபேபால, நிஸங்க ஆகியோரையும் டயர் கூட்டுத்தாபனத்தின் ஊழியரான பெரேரா என்பவரையும் படுகொலை செய்ததாகத் தெரிவித்துள்ளார். இரண்டாவது முறைப்பாட்டில் முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விக்கிரமசிங்க, ராஜிதசேனாரட்ண, காமினி அபேரட்ண ஆகியோரால் தயாரிக்கப்பட்ட போலிக்கடவுச்சீட்டைப் பயன்படுத்தி 1996ஆம் ஆண்டு நாட்டைவிட்டு வெளியேறியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கருத்துக்கள் பற்றி விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சனாதிபதி இரண்டு வாரங்களுக்கு முன்னர் பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வாவிடம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

# இயந்திரக்கோளாறால் கரையொதுங்கிய தமிழக மீனவர்கள் பாதுகாப்பாக அனுப்பிவைப்பு

(வடமராட்சி)

இலங்கைக் கடற்பரப்பினுள் கடற்கொந்தளிப்பினால் அள்ளுண்டு வந்த நான்கு தமிழக மீனவர்கள் உள்ளூர் மீனவர்களால் மீட்கப்பட்டு பாதுகாப்பாக சொந்த இடங்களிற்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் நாட்டின் இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த குறித்த மீனவர்கள் நால்வரும் பயணித்திருந்த படகு, இயந்திரக் கோளாறால் இடைநடுவில் நின்றுள்ளது. இந்நிலையில் கடற் கொந்தளிப்பால் அலைக்கழிக்கப்பட்ட படகும் அதிலிருந்த மீனவர்களும் பின்னர் நெடுந்தீவு கடற்பகுதியில் கரைசேர்ந்துள்ளனர்.

இந்நிலையில் அப்பகுதியின் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த உள்ளூர் மீனவர்களால் மீட்கப்பட்ட இவர்கள், பின்னர் இலங்கை - இந்திய கடல் எல்லைப் பகுதியில் வைத்து பாதுகாப்பாகத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை, பிடிக்கப்பட்ட 67 இந்திய மீனவர்கள் யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் மீது யாழ். மேல் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (27)

# பூநகரிப் பிரதேச விளையாட்டுப் போட்டியில் எவரெடி கழகம் முதலிடம்

பூநகரிப்பிரதேச செயலர் பிரிவுக்குட்டபட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டிகள் கடந்த ஞாயிறன்று நிறைவடைந்தன.

எவரெடி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற மேற்படி விளையாட்டு நிகழ்வில் 204 புள்ளிகளைப் பெற்று எவரெடி விளையாட்டுக்கழகம் முதல் இடத்தையும் 174 புள்ளிகளைப் பெற்று செந்தாரகை விளையாட்டுக்கழகம்இரண்டாம் இடத்தையும் 83 புள்ளிகளைப் பெற்று அண்ணா விளையாட்டுக் கழகம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு.இராசநாயகம் கலந்து சிறப்பித்தார். சிறப்பு விருந்தினராக கிளி. மாவட்ட விளையாட்டு அதிகாரி கனகராஜா, தமிழீழ விளையாட்டுத் துறை கிளி.மாவட்ட பொறுப்பாளர் ராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இப் போட்டியில் சிறந்த விளையாட்டு வீரராக எவரெடி விளையாட்டுக் கழகத்தின் யோ. முகுந்தனும் சிறந்த வீராங்கனையாக அண்ணா விளையாட்டுக்கழகத்தைச்சேர்ந்த டினோயாவும் தெரிவாகினர்.

# அப்புத்தளையில் மாணவியைக் கடத்திய கும்பலொன்று பொலிசாரால் கைது

அப்புத்தளையில் பாடசாலை மாணவி ஒருவரைக் கடத்திச் சென்று பெற்றோரிடம் 23 லட்சம் ரூபா கப்பம் கேட்ட ஐந்து பேர் கொண்ட கோஷ்டி ஒன்றை பொலிசார் கைது செய்து மாணவியை மீட்டு பெற்றோரிடம் ஒப்படைத்துள்ளனர். கடந்த சனிக்கிழமை காலை பாடசாலைக்கு சென்றவேளை இம் மாணவி ஐந்து பேர் அடங்கிய கும்பல் ஒன்றினால் கடத்திச் செல்லப்பட்டு பெற்றோரிடம் 23இலட்சம் ரூபா கப்பம் கேட்டனர். இம்மாணவியை மறைத்து வைத்திருக்கும் காட்டுப்பகுதியை தேடிப்பிடித்த பொலிசார் ஐந்து பேரையும் கைது செய்து கடந்த ஞாயிறன்று நீதிமன்றில் ஆஜர் செய்துள்ளனர். இவர்களை 14 நாட்கள் தடுப்புக்காவலில் வைத்திருக்குமாறு நீதிபதி உத்தர விட்டுள்ளார். (32)

# அஞ்சல்மூல வாக்களிப்பு நிலையங்களில் அத்துமீறல்களைக் கண்காணிக்க நடவடிக்கை

அஞ்சல் மூல வாக்களிப்பு நடைபெறும்போது அத்துமீறல்கள் நடைபெறாமல் இருப்பதற்காக கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருக்கிறது.

இந்த நடவடிக்கையை தேர்தல் ஆணையாளர் மேற்கொண்டுள்ளார். இதன் அடிப்படையில் அத்துமீறல்கள் நடைபெறலாம் எனச் சந்தேகிக்கும் வாக்களிப்பு மையங்களில் தேர்தல் செயலகங்களில் கடமையில் உள்ள உதவி தெரிவு அத்தாட்சி அலுவலர்கள் கண்காணிப்பாளர்களாக அமர்த்தப்படவுள்ளனர். அஞ்சல் மூல வாக்களிப்பு எதிர்வரும் 25, 26ஆம் திகதிகளில் இடம்பெற உள்ளது. இதற்காக 3500 மையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இம்முறை அஞ்சல் மூல வாக்களிப்புக்கு சுமார் இரண்டு லட்சத்து எண்பத்தாறாயிரத்து அறுநூற்று ஐம்பத்துநான்கு பேர் தகுதிபெற்றுள்ளனர்.

இதேவேளை, வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணி எதிர்வரும் 25ஆம் திகதியுடன் முடிவடையும். இதற்குள் வாக்காளர் அட்டை கிடைக்கப் பெறாதவர்கள் அருகிலுள்ள அஞ்சல் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றார்கள். (32)

# நட்டாங்கண்டல்-முகமாலை பேருந்துப்பணிவழித்தட மாற்றம்



நட்டாங்கண்டல், பாலையடி, கொல்லவிளாங்குளம், ஒட்டறுத்தகுளம், மல்லாவி பேருந்து நிலையம், கொல்லவிளாங்குளம், மாங்குளம், முகமாலை வழித்தடம் 26.03.2004 ஆம் நாளிலிருந்து நட்டாங்கண்டல், பாலையடி, கறுப்பிகுளம், மல்லாவி, பேருந்து நிலையம். ஒட்டறுத்தகுளம், கொல்லவிளாங்கும், மாங்குளம், முகமாலை. பணியாக மாற்றப்பட்டுள்ளது. என்பதனை பொதுமக்களுக்கு அறியத்தருகின்றோம்.

முகாமையாளர்,
பயணியர் போக்குவரவு ஊர்தி,
வழியனுமதிப் பணியகம்.

(சி-9429)

# துணுக்காய்-புதுக்குடியிருப்பு ஒரு நேரப் பேருந்துப்பணி 26/03/2004ஆம் நாளிலிருந்து இரு நேர முழுப்பணியாக மாற்றம்



மேற்படி பணி 26.03.2004 ஆம் நாளிலிருந்து இருநேர முழுப்பணியாக மாற்றப்பட்டுள்ளது. என்பதனை பொதுமக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருக்கின்றோம்.

## துணுக்காய் - புதுக்குடியிருப்பு

**நேர ஒழுங்கு:**

| துணுக்காய் | மல்லாவி | பாலையடி | மாங்குளம் | முறிகண்டி | கிளிநொச்சி | வட்டக்கச்சி | புளியம்பொக்கணை | விசுவமடு | புதுக்குடியிருப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலை 08.15 | 08.30 | 08.50 | 09.10 | 09.50-10.10 | 10.30-10.40 | 11.10 | 11.25 | 11.45 | 12.30 |
| மாலை 01.30 | 01.45 | 02.05 | 02.45 | 03.25-03.45 | 04.05-04.15 | 04.45 | 05.00 | 05.20 | 06.10 |

## புதுக்குடியிருப்பு - துணுக்காய்

**நேர ஒழுங்கு:**

| புதுக்குடியிருப்பு | விசுவமடு | தருமபுரம் | இராமநாதபுரம் | வட்டக்கச்சி | கிளிநொச்சி | முறிகண்டி | மாங்குளம் | பாலையடி | மல்லாவி | துணுக்காய் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலை 08.15 | 09.00 | 09.25 | 09.35 | 09.50 | 10.20-10.30 | 10.50-11.10 | 11.40 | 12.30 | 12.50 | 01.00 |
| மாலை 01.30 | 02.15 | 02.40 | 02.50 | 03.05 | 03.35-03.45 | 04.05-04.25 | 05.05 | 05.45 | 06.05 | 06.15 |

முகாமையாளர்,
பயணியர் போக்குவரவு ஊர்தி,
வழியனுமதிப் பணியகம்.

(சி-9429)

# மல்லாவி-மாங்குளம்-முகமாலை (பளை) பேருந்துப்பணி நேர மாற்றம்



மேற்படி பணி 26.03.2004 ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கிற்கு அமைய நடைபெறும் என்பதனை பொது மக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

## மல்லாவி - மாங்குளம் - முகமாலை

**நேர ஒழுங்கு:**

| மல்லாவி | பாலையடி | கொல்லவிளாங்குளம் | மாங்குளம் | முறிகண்டி | கிளிநொச்சி | பரந்தன் | இயக்கச்சி | புதுக்காட்டுநகர் | முகமாலை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலை 09.15 | 09.25 | 09.40 | 10.20 | 11.00-11.20 | 11.40-11.50 | 12.10 | 12.30 | 12.40 | 01.00 |

## முகமாலை - மாங்குளம் - மல்லாவி

**நேர ஒழுங்கு:**

| முகமாலை (பளை) | புதுக்காட்டுநகர் | இயக்கச்சி | பரந்தன் | கிளிநொச்சி | முறிகண்டி | மாங்குளம் | கொல்லவிளாங்குளம் | பாலையடி | மல்லாவி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாலை 05.30 | 05.45 | 05.50 | 06.15 | 06.35-06.45 | 07.05-07.25 | 08.05 | 08.41 | 08.50 | 09.15 |

## முகமாலை - கோணாவில்- மல்லாவி

**நேர ஒழுங்கு:**

| முகமாலை | புதுக்காட்டுநகர் | இயக்கச்சி | பரந்தன் | கிளிநொச்சி | கந்தபுரம் | அம்பலப்பெருமாள்சந்தி | துணுக்காய் | மல்லாவி |
|---|---|---|---|---|---|---|---|---|
| மாலை 03.30 | 03.45 | 03.50 | 04.15 | 04.35-04.45 | 05.45 | 06.50 | 07.15 | 07.30 |

குறிப்பு:- மாலை 03.30 மணிக்கு தொடங்கும் முகமாலை-மாங்குளம்- மல்லாவி பேருந்துப்பணி 26.03.2004ஆம் நாளிலிருந்து முகமாலை-கோணாவில்-மல்லாவி பணியாக மாற்றம்

முகாமையாளர்,
பயணியர் போக்குவரவு ஊர்தி,
வழியனுமதிப் பணியகம்.

(சி-9429)

கருணா செய்த துரோகத்தினால் சில பௌத்த-சிங்களப் பேரினவாத விமர்சகர்கள், எழுத்தாளர்கள் கிளர்ந்தெழுந்துள்ளனர். இவர்கள் ஒருபுறத்தில் கருணாவின் செயற்பாட்டால் 'தமிழர் தாயகம்' 'தமிழர் தேசியம்' என்பன கேள்விக்குறியாகி விட்டதாகவும், இனி அது பற்றித் தமிழர் தரப்பு பேசுவதில் பயனில்லை எனவும் துள்ளிக்குதிக்கத் தொடங்கியுள்ளனர்.

மற்றொருபுறம் விடுதலைப்புலிகள் இராணுவரீதியில் பலவீனப்பட்டுப் போய் விட்டனர். இனிப் புலிகளின் இராணுவச் செயற்பாட்டிற்கு அஞ்சத் தேவையில்லை. இராணுவரீதியில் புலிகளைத் தோற்கடிக்க இதுவே தக்க சந்தர்ப்பம்எனக்கூறத் தொடங்கி விட்டனர்.

அதிலும் ஒருசிலர் இச்சந்தர்ப்பத்தை சிறிலங்கா அரசு அதாவது சிங்களவர் பயன்படுத்திக்கொள்ளாதுவிட்டால் அவர்கள் போன்று மூடர்கள் இல்லை என்றுகூட வெளிப் படையாகவே கூறவும் தயங்கவில்லை. இதனை தாங்களைப் பெரும் அரசியல் விமர்சகர்களாகவும் இடதுசாரிகள்எனவும் பறை சாற்றிக் கொண்டிருப்பவர்களான டயான் ஜெயதிலக்கா போன்றவர்களும் கூறத்தயங்க வில்லை.

இவ்வாறான கருத்துக்களை வெளிப் படுத்துபவர்கள் அவற்றிற்கு அடிப்படையாகக் கொண்டுள்ள விடயமானதுகருணா வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து மட்டு-அம்பாறை மாவட்டங்களை தமிழர் தாயகப் பகுதியில் இருந்து கருணா பிரித்தெடுத்து விட்டதாகவும் விடுதலைப்புலிகளின் பலத்தின் குறிப்பிடத்தக்க பகுதி கருணாவிடம் தற்பொழுது உள்ளதாகவும் இவ்

இதேவேளை இனப்பிரச்சினைக்கு மேலாதிக்க நிலையில் இருந்து பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு இதுவொரு நல்லதொரு சந்தர்ப்பமென சிங்கள அரசியல்வாதிகள் சிலர் நம்பிக்கை கொண்டுள்ளனர். இது குறித்து பிரஸ்தாபித்தள்ள சனாதிபதி சந்திரிகா புலிகள் தமக்குள் முரண்பட்டு நிற்பது பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு நல்லதொரு சந்தர்ப்பமென அபிப்பிராயம் வெளியிட்டுள்ளார்.

அதாவது சனாதிபதி சந்திரிகாவின் மதிப்பீட்டின்படி கருணாவின் குழப்பத்தினால் விடுதலைப் புலிகள் பலவீனமடைந்து போவர் என்பதும் அதன் காரணமாகத் தலைவர் பிரபாகரன் விட்டுக்கொடுப்புக்களுடன் பேச்சு நடத்த முன்வருவார் என்பதுமே அவரது எதிர்பார்ப்பாகும். இதனை அவர் வெளிப் படையாகவும் கூறியுள்ளார்.

அவ்வாறு இல்லாது விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முறித்துக் கொண்டு யுத்தத்திற்குச் சென்றால் கருணா இல்லாத விடுதலைப் புலிகளை தோற்கடிப்பது இலகு என்பது அவர்களின் அபிப்பிராயமாகும். ஏனெனில் கருணா "இந்து"பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் புலிகளின் 75 சதவீதமான பலம் தானே எனவும் விடுதலைப் புலிகளுக்கு போர் யுத்திகளையும் பயிற்சிகளையும், தொழில் நுட்பத்தையும் தானே வழங்கியதாகவும் தெரிவித்துள்ள கருத்துக்கள் சந்திரிகா போன்றவர்கள் இத்தகைய முடிவிற்கு வர காரணமாக இருந்திருக்கலாம்.

ஆனால், இம் மதிப்பீடுகள் யாவும் தவறான தகவல்களின் அடிப்படையில்

கருணாவிற்கு முன்பதாகவே இது அழிக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஏனெனில் கருணாதான் முதல் முதலில் தமிழ் இனத்துரோகியாக உருப்பெற்ற ஒருவர் அல்ல. நீண்டகாலமாக காலத்திற்குக் காலம் துரோகிகள் உருவாகியே வந்துள்ளனர். இதில் உள்ளவர்களின் பட்டியல் நீண்டது. இவர்கள் தனியாக ஆயுதப் போராட்ட காலத்தில் மட்டுமல்ல அதற்கு முன்னதாகவே இருந்துள்ளனர். அத்தோடு இவர்கள் மட்டக்களப்பு என்றோ அன்றி கிழக்கென்றோ தனியாக உருவாகவில்லை. அவர்கள் வடக்கிலும், கிழக்கிலும், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருமலை, அம்பாறை, வன்னி என அனைத்திலுமே உருவாகியிருந்தனர்.

தற்பொழுது உருவாகியவர்கள் தமது துரோ கத்தனத்திற்கு கருவியாக்கிக் கொண்டதே பிரதேசவாதமாகும். அதில் கூட கருணா விற்குப் பல முன்னோடிகள் இருக்கின்றார்கள். ஆனால் அவ்வாறு இருந்தும் தமிழர் தேசியம் என்பதோ தாயகம் என்பதோ அர்த்தமற்ற தொன்றாகவோ பிளவுபட்டதொன்றாகவோ மாறவில்லை. ஏனெனில் தமிழர்தேசியம் என்பது அத்துணை உறுதிமிக்கதும் பல மானதுமான அடிப்படையைக் கொண்டது.

ஆகையினால் கருணாவின் துரோகத்தனம் குழப்பம் என்பவற்றால் தமிழர் தாயகம், தேசியம் என்பன பலவீனப் பட்டுப்போகும், சிதைத்துவிடக் கூடியது ஒன்று என்று எவராவது கற்பனை செய்வார்களேயானால் அவர்கள் ஏமாற்றமடைய வேண்டியதாகவே இருக்கும். அதேபோன்று கருணாவின் செயலினால் விடுதலைப்

ஆகையினால் கருணாவை இராணுவ ரீதியில் எதிர்கொள்வதும் வெற்றிகொள்வது என்பதும் கடினமானதொன்றல்ல. ஆனால் கருணா என்கின்ற தனிமனிதன் புரியும் துரோகத் தனத்திற்கு தண்டனை வழங்குவதற்காக கருணாவினால் வலுக்கட்டாயமாக கட்டுப்பாட்டிற்குள் வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்-யுவதிகளின் இரத்தம் சிந்தப்படுதல் கூடாது என்ற தேசியத் தலைவரின் நிலைப்பாடே கருணா மீதான நடவடிக்கையை மிகவும் நிதானமாகவும், தீர்க்கதரிசனத்துடனும் மேற்கொள்ள வேண்டிய அவசியத்தைத் தோற்றுவித்துள்ளது.

இது ஒருபுறமிருக்க ஒரு விடுதலை அமைப்பின் பலம் என்பது ஆயுதமோ போராளிகளின் எண்ணிக்கையோ அல்ல. அப்போராட்டத்திற்குரிய தார்மீக பலமும், அப்போராட்டத்திற்குரிய மக்களின் ஆதரவுமே. இவ் ஆதரவானது விடுதலைப் புலிகளைப் பொறுத்து அன்றும்-இன்றும் நிரம்பவே உள்ளது.

அதாவது தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டமானது தார்மீக ரீதியில் நியாயப்பாடானதொன்றாகும். ஆகையினால் அது எப்பொழுதும் பலம்பொருந்தியதொன்றாகவே இருக்கும். இதைப்போன்றதே விடுதலைப் புலிகளுக்கு மக்களிடமுள்ள ஆதரவாகும். அதாவது தார்மீக ரீதியில் நியாயப்பாடான போராட்டத்தை விடுதலைப் புலிகள் தலைமையேற்று நடத்துவதினூல் அவர்களுக்கு மக்களின் ஆதரவு என்றும் கிடைக்கப்பெறும் ஒன்றாகியுள்ளது.

ஆனால் கருணா போன்றவர்களின் நடவடிக்கைகள் தார்மீக ரீதியிலோ அன்றி

# 'தமிழர் தேசியம்' சிதையுமென பகற்கனவு காண்கிறது பேரினவாதம்!

விமர்கர்கள், நோக்கர்கள் முடிவு செய்து விட்டமையே ஆகும்.

இவ்வாறானதொரு முடிவுக்கு அவர்கள் வந்துள்ளமைக்குச் சிலகாரணிகளும் இல்லாமல் இல்லை. அதிலும் குறிப்பாக 'இந்து'விற்கு கருணா அளித்துள்ள பேட்டியானது தமிழர் தாயகம் தமிழர் தேசியம் என்பன தொடர்பாக அவரது முரண்பாட்டை வெளிக்காட்டியது. இந்நிலையானது பௌத்த சிங்கள பேரினவாதிகளுக்கு அவல் கிடைத்தது போன்றதாகியது. இதேவேளை கருணா தனது கட்டுபாட்டின் கீழ் உள்ளதாகக் கூறும் படையணிகள் குறித்து வெளிப்படையாகவும் பேசியுள்ளார். அதாவது படையணியிலுள்ள போராளிகளின் எண்ணிக்கை அங்குள்ள ஆயுதத்தளபாடங்களின் வகை, தரம் என்பன வெல்லாம் வெளியிட்டமையானது சிங்களப் பேரினவாதிகளுக்கு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளதோடு விடுதலைப் புலிகளின் பலம் பெரிதும் வீழ்ச்சி கண்டுள்ளதாக எண்ணவைத்துள்ளது.

மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களேயாகும். ஏனெனில் கருணா கூறிய தகவல்கள் உண்மைக்குப்புறம்பானவை என்பது ஒருபுறமிருக்க தமிழர் தாயகம், தேசியம் என்பவை எல்லாம் கருணா போன்ற துரோகத்தனம் புரியும் ஒருவரினாலோ ஒரு குழுவினராலோ தீர்மானிக்கப்படக் கூடியவையல்ல. அவ்வாறு தீர்மானிக்கப்படக் கூடியவையாக இருப்பின்-தமிழர் தாயகம், தேசியம் என்பவையெல்லாம் என்றோ கேள்விக்குரியவையாகவும் இன்று பேசப்பட முடியாதவையாகவும் மறைந்துபோயிருக்கும்.

அதாவது இன்று கருணா செய்த துரோகமானது விடுதலைப் புலிகளுக்கு மட்டுமானதல்ல. தமிழ் மக்கள் அனைவருக்குமானதே. ஆயினும் தனி ஒரு மனிதனால் தமிழர் தாயகம், தேசியம் என்ற கோட்பாடுகளை அழித்துவிட முடியாது. ஏனெனில் இது தமிழ்ச் சமுதாயத்தின் உணர்வுகளில் ஊறியதொன்று. கருணா போன்ற ஒருவரினால் இவை அழித்தொழிக்கப்பட முடியுமானால் இதற்கு முன்பதாகவே- அதாவது

புலிகள் இராணுவ ரீதியில் பலவீனப் பட்டுப்போய் விடுவார்கள். இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வையும் முயற்சித்துப் பார்க்கலாம் என யாராவது கருதுவார்களேயானால் அவர்களும் ஏமாற்றம் அடைய வேண்டியவர்களாகவே இருப்பார்கள்.

கருணா வடக்கில் நடந்த சில சமர்களுக்கு தளபதியாகச் செயற்பட்டிருக்கலாம். ஆனால் இதுபோன்று வேறு பல தளபதிகளும் பல சமர்களை நடத்தியும் உள்ளார்கள். வெற்றிகளைக் கண்டும் உள்ளார்கள். கருணா பங்குபற்றாத மிக முக்கிய சமர்கள் பல ஜெயசிக்குறு நடவடிக்கைக்கு முன்பும் நடந்ததுண்டு. பின்பும் நடந்ததுண்டு. அவற்றில் வெற்றியும் பெறப்பட்டதுண்டு.

இது ஒருபுறமிருக்க - விடுதலைப் புலிகளும் தேசியத் தலைவர் பிரபாகரனும் எதிர்கொண்ட இராணுவ சவால்களுக்கு கருணாவின் குள்ளநரித் தனமும், துரோகத் தனமும் ஒரு பொருட்டான விடயமல்ல.

உண்மைத்தன்மை பொருந்தியதாகவோ இல்லாததன் காரணத்தினால் அவை நிலைத்து நிற்க முடியாதவை ஆகின்றன. இதற்கு கருணா மாத்திரமல்ல பல இனவிரோதக் குழுக்கள் நிலைந்து நிற்க முடியாமல் போனமைக்கும் காரணங்கள் இதுவேயாகும்.

ஆகையினால் கருணாவின் தறபோதைய துரோகத்தனத்தை வைத்து யாராவது தமிழ் மக்கள் குறித்தும் விடுதலைப் புலிகள் குறித்தும் தவறான மதிப்பீடு ஒன்றிற்குச் செல்வார்களேயானால் அவர்கள் ஏமாற்றமடையவேண்டியதாகவே இருக்கும். மேலும் அத்தகைய மதிப்பீட்டினால் இலங்கையின் அரசியலானது மேலும் நெருக்கடிக்கும், சிக்கலுக்கும் உள்ளாக்குவதாக இருக்குமே தொழிய ஒருபோதும் நாட்டின் நெருக்கடிக்குத் தீர்வு கண்டுவிட உதவப் போவதுமில்லை.

□

**ஜெயராஜ்**

---

- இறுதித் தேர்வில் முறைகேடு எனக் குற்றம்சாட்டி-

# யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் கதவடைப்பு, ஆர்ப்பாட்டம்!

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து கதவடைப்பு மற்றும் ஆர்ப்பாட்டப் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். நேற்று யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் இடம் பெற்ற இப் போராட்டம் பற்றித் தெரியவருவதாவது:

அண்மையில் நடந்து முடிந்த இறுதியாண்டு மாணவர்களுக்கான தேர்வில் சில அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட முறைகேடான நடவடிக்கைகளால் 300 மாணவர்கள் தமது பட்டத்தை தவறவிட வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது என்றும் இதற்கு பல்கலைக் கழக நிர்வாகம் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வில்லை எனவும்குற்றம் சாட்டியே இப் போராட்டம் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை ஆங்கிலப் பாடதேர்விலேயே இம்முறைகேடு இடம் பெற்றுள்ளதாக மாணவர்கள் குற்றம் சாட்டிவந்தமை குறிப்பிடத்தக்கத்து. (33)

# கட்டாக்காலி நாய்களை ஒழிப்பதற்கு நடவடிக்கை

(அலுவலகசெய்தியாளர்)

கட்டாக்காலி நாய்களை கட்டுப் படுத்தும் நடவடிக்கையினை கிளிநொச்சி பிரதேச சபையினர் மேற் கொண்டு வருகின்றனர்.

அதனடிப்படையில் இன்று கிளி உதயநகர் மேற்கு, கனகபுரம், ஜெயந்திநகர்ப் பகுதிகளில் மேற்படி கட்டாக்காலி நாய்களை ஒழிக்கும் நடவடிக்கையினை பிரதேச சபையினர் மேற்கொள்ளவுள்ளனர்.

எனவே இந்நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் ஊழியர்களுக்கு இந் நடவடிக்கையினை மேற்கொள்ள கிராமமக்கள் அனுசரணை வழங்கிடும் வண்ணம் கரைச்சிப் பிரதேச சபை விசேட ஆணையர் பொன் நித்தியானந்தம் வேண்டியுள்ளார். (சோ)

# அரச ஊடகங்கள் மீது ஐ.தே.முன்னணி குற்றச்சாட்டு!

-- தமது பிரச்சாரத்திற்கு முன்னுரிமை இல்லையாம்

தேர்தலில் போட்டியிடும் கட்சி வேட்பாளர்கள் தேர்தல் ஆணையாளரைச் சந்தித்து அரச ஊடகத் துறை சம்பந்தமாக கலந்துரையாடல் நடைபெற்ற பொழுது அரச ஊடக பிரச்சாரங்களில் ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் பிரச்சாரங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படவில்லை எனவும், இதனால், கட்சி சில பின்னடைவுகளைச் சந்திக்க நேரிட்டுள்ளதென ஐக்கிய தேசிய சட்டத்தரணி தயாபெல்பொல தேர்தல் ஆணையாளரிடம் தெரிவித்தார்.

இதற்கு ஐக்கிய சுதந்திர மக்கள் முன்னணியின் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தனியார் ஊடகங்கள் அதிகமாக ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆதரவு கொடுப்பதாகப்பதில் அளித்துள்ளார்.

# ஹெல உறுமய பிரச்சாரத்திற்கு வெளிநாட்டிலிருந்து பிக்குகள்!

(கொழும்பு)

இம்முறை தேர்தலில் போட்டியிடும் ஹெல உறுமய கட்சியினருக்கு ஆதரவளிப்பதற்காக அமெரிக்காவில் வசிக்கும் பௌத்த பீடாதிபதி மாரகம தர்மசிறி தேரரும், தாய்வானில் வசிக்கும் பௌத்த பீடாதிபதி பேதாகம வத்திர தேரரும், இங்கிலாந்தில் வசிக்கும் பௌத்த பீடாதிபதி கலயாய பியதிச்ச தேரரும் தேர்தல் பிரச்சார வேலைகளில் கலந்துகொள்ளப்போவதாக அறிவித்துள்ளனர்.

# தமிழீழ வைப்பகம்
## பணிநிலை வேண்டுகை

தமிழீழ வைப்பகத்தினால் பின்வரும் பணிநிலைக்குத் தகைமை உள்ளவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

பணிநிலை :- தொழில்நுட்ப உத்தியோகத்தர்

அகவை :- 24 வருடங்களிற்கு மேல்

தகைமை :- தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா
NATIONAL DIPLOMA IN TECHNOLOGY (NDT)
அல்லது
தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ்
NATIONAL CERTIFICATE IN TECHNOLOGY (NCT)
அல்லது
பட வரைஞர்
DRAUGHTMEN SHIP

ஊதியம் :- நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

மேற்படி தகைமைகளுக்குச் சமமான கல்வித்தகைமை, பட்டறிவு உள்ளவர்களும் 2004.04.05.ஆம் நாள் மாலை 3.00 மணிக்கு கீழ்வரும் ஆவணங்களுடன் நேரில் வருகை தரவும்.

- ★ கல்வித்தகைமைச் சான்றிதழ்கள்
- ★ பட்டறிவுச் சான்றிதழ்கள்
- ★ நற்சான்றிதழ்கள்
- ★ பிறப்புச் சான்றிதழ் (மூலம்)
- ★ தேசிய அடையாள அட்டை

மேலாளர்,
ஆளுகைப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்,
A9 நெடுஞ்சாலை,
கிளிநொச்சி.

(சி-9427)


# ஹெல உறுமய சுவரொட்டிகளை ஒட்டிய பௌத்த பிக்குகள் கைது!

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமய கட்சிக்குச் சார்பாக சுவரொட்டிகளை ஒட்டிய இரண்டு பௌத்த பிக்குகள் கைது செய்யப்பட்டு ஒத்தி வைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிக்குகள் இருவரும் தேர்தல் சட்டங்களுக்கு மாறான விதத்தில் வன்முறையைத் தூண்டும் வகையில் சுவரொட்டிகளை ஒட்டியதாகப் பொலிசார் குற்றம் சுமத்தியுள்ளனர். இச சம்பவம் வத்தேகம என்ற இடத்தில் நடைபெற்றுள்ளது.

தேர்தல் சட்டவிதிகளின்படி வேட்பாளர்களை ஆதரித்து சுவரொட்டிகளை ஒட்டலாம் ஆயினும் பொதுக்கூட்டம் நடைபெறும் இடங்களில் ஒட்டக்கூடாது.

இது தொடர்பாக அக்கட்சியின் பேச்சாளர் கூறும்போது, பிக்குகள் சுலோகங்களை உச்சரித்துள்ளனரே தவிர ஒட்டவில்லை எனவும் தான் அவர்களது கைதைக் கண்டிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

# சனசமூக நிலையம் இயங்கத் தடை!

(யாழ்ப்பாணம்)

யாழ்- தட்டாதெரு சந்தியிலுள்ள கலாஜோதி சனசமூக நிலையத்தை இயங்கவைப்பதற்கு படையினர் பெரும் தடையாக இருந்துவருவதாக அச்சன சமூக நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

1996 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில்இடம் பெற்ற இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கையைத் தொடர்ந்து மேற்படி சனசமூக நிலையத்தை இராணுவத்தினர் தமது மினி முகாமாகப்பயன்படுத்தி வந்தனர். பின்னர் அதிலிருந்து படையினர் விலகினாலும் அதை இயங்கச்செய்வதற்கு மக்கள் முயற்சித்த வேளை படையினர் தடைவிதித்துள்ளனர். (33)


S.J.S லேணஸ் S.J.S லேணஸ் S.J.S லேணஸ் S.J.S லேணஸ் S.J.S லேணஸ் S.J.S லேணஸ்

கிளிநகரில்

S.J.S லேணஸ்



எதிர்வரும் 22.03.2004 திங்கள் தொடக்கம் கிளி/நகரில் சகல வாகனங்களுக்கும் முழு பயிற்சியளிக்கப்பட்டு அரச சாரதி அனுமதிப்பத்திரம் ஒரு மாதத்தில் பெற்றுத்தரப்படும்.

தொடர்புகளுக்கு:- S.J.S லேணஸ், பிரதான வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி.

குறிப்பு:- ஆய்ப்பகுதி நடுவப்பணிமனை முன்பாக

(4312)

நிர்வாகம்
S.J.S லேணஸ்.

S.J.S லேணஸ் S.J.S லேணஸ் S.J.S லேணஸ் S.J.S லேணஸ் S.J.S லேணஸ் S.J.S லேணஸ்





“ உ
சிவமயம் ”

# நாகதம்பிரான் நல்லருள் நாடடங்கும் பாலிக்குக

கரைச்சி

## புரியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயஆண்டுற்சவப் பொங்கல்

(04-04-2004)

விழாவின்போது வாணிபம் மேற்கொள்ளும் வாணிபர்களுக்கான

## அறிவித்தல்

மேற்படி பொங்கல் விழா 4.4.2004 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. விழாவின் போது வாணிபம் மேற்கொள்ளும் வாணிபர்கள் எதிர்வரும் 28.03.2004 ஞாயிறு முற்பகல் 10.00 மணிக்கு வியாபார நிலையங்களுக்கான ஏலவிற்பனை ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

குறிப்பு:-

உணவு கையாளும் நிலைய உரிமையாளர்கள் தமிழீழ சுகாதார சேவையினரின் கலந்துரையாடல் 30.03.2004 செவ்வாய் ஆலய முன்றலில் மு.ப.10.00 மணிக்கு நடைபெறவுள்ளதால் சகல உணவு கையாளும் உரிமையாளர்களும் தவறாது கலந்துகொள்ளவும், தவறும் வாணிபர்களுக்கு நிலைய அனுமதி வழங்கப்படமாட்டாது.

(சி.9428)

ஆலய பரிபாலனசபை



## சிந்தனைக்கு

சமாதான வழிமூலம் எமது மக்களுக்கு நீதி கிடைக்குமானால் நாம் அதனை மகிழ்ச்சியுடன் வரவேற்போம்.

தமிழீழத்தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 24-03-2004


## சமதர்மவாதிகளாக மாறிவிட்ட...!

சிறிலங்காவிலுள்ள பிரதான கட்சிகள் குறிப்பாக எதிர்க்கட்சிகள் தற்பொழுது வழங்கும் வாக்குறுதிகள் தாம் பதவிக்கு வரப்போவதில்லை என்ற நம்பிக்கையில் வழங்கப்படுகின்றனவா? அன்றி தேர்தல் காலப்பேச்சு என்பது வாக்குறுதிகளாக அவை பொருட்படுத்தப்படத்தக்கவையோ அன்றி நிறைவேற்றப்படவேண்டியவையோ அல்ல என்ற நிலைப்பாட்டுடன் கூறப்படுகின்றனவா? என்ற கேள்விகள் தற்போதைய தென்னிலங்கைத் தேர்தல் பிரச்சாரத்தை அவதானிக்கையில் தவிர்க்கமுடியாது எழுகின்றன.

தேர்தலுக்கு முன்பானதான காலப்பகுதியில் யுத்தநிறுத்த உடன்பாடும்-போர்நிறுத்த நடைமுறைகளும் எதிர்க்கட்சிகளான பொ.ஐ.முன்னணியாலும் ஜே.வி.பி.யினாலும் கடுமையாகவே விமர்சிக்கப்பட்டன. விடுதலைப்புலிகள் பெரும் அனுகூலங்களைப் பெற்றுவிட்டதாக கூக்குரலிட்ட இக்கட்சிகள் சனாதிபதி சந்திரிகாவைக்கொண்டு இதற்கு மாறான செயற்பாட்டிலும் இறங்கின.

ஆனால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதும் இக்கட்சிகளின் பேச்சுக்கள் மாற்றங்காணத் தொடங்கின. யுத்த நிறுத்த உடன்பாடுபற்றி விமர்சிப்பது படிப்படியாக குறையத் தொடங்கியது. விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவது குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டது. புலிகளுடன் யுத்தநிறுத்தம் தொடர புதியதொரு ஒப்பந்தம் செய்யப்படவேண்டும் என்பது தவிர்க்கப்பட்டது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவோ சமாதானத்திற்குதான் எவ்வேளையிலும் விரோதமாகச் செயற்படப்போவதில்லை என வாக்குறுதிகளை வழங்கும் அதேநேரம் விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை நகல்திட்டத்தின் அடிப்படையில் பேச்சுக்களை நடத்துவதற்கு தயாராக இருப்பதாகவும் அறிவிப்புச்செய்துள்ளார்.

சனாதியதி சந்திரிகா தேர்தல் காலங்களில் இத்தகைய வாக்குறுதிகளை வழங்குவது என்பது பெரிதும் ஆச்சரியத்திற்குரியதொன்றல்லத்தான். ஏனெனில் கடந்த காலத்தில் இதுபோன்ற பல வாக்குறுதிகளை அவர் தனியாக தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, சிங்களவருக்கே வழங்கியுள்ளார். ஆகையினால் சனாதிபதியே பொ.ஐ.முன்னணியோ இவ்வாறு வாக்குறுதிகளை வழங்குவதில் பின்நிற்கமாட்டார்கள்.

ஆனால் ஜே.வி.பி. தற்பொழுது வழங்கும் வாக்குறுதிகள்தான் இன்று எதை நம்புவது எதை நம்பாமல் விடுவது என்பது போன்ற குழப்பத்தினை ஏற்படுத்துவதாக உள்ளது. ஏனெனில் ஜே.வி.பி. வழங்கும் வாக்குறுதிகள் ஆச்சரியமும், அதிர்ச்சியும் மிக்கனவயாகவுள்ளன. சவப்பெட்டியிலிருந்து சடலத்தை உயிர்த்தெழவைக்கும் வித்தைபோன்றுள்ளது.

விடுதலைப்புலிகளுடனான யுத்தநிறுத்த உடன்பாட்டை எதிர்த்துவந்த ஜே.வி.பி, விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதாயின் புதியதொரு உடன்பாடு செய்துகொள்ளப்படவேண்டி வரும் என்றே தெரிவித்துவந்தது. அதேவேளை சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணக்கப்பாடு ஒன்றை எட்டுவதற்காக சுமார் ஒருவருட காலமாக பேச்சுவார்த்தை நடத்திய ஜே.வி.பி.யினால் முடிவுக்கு வரமுடியவில்லை. சுதந்திரக்கட்சி-ஜே.வி.பி. கூட்டணி குறித்து இருதரப்பும் இணைந்து வெளியிட்ட அறிக்கையில் கூட இனப்பிரச்சினை விவகாரத்தில் முன்னேற்றம் காணப்படவில்லை.

ஆனால், தற்பொழுது ஜே.வி.பி வெளிப்படுத்தியுள்ள நிலைப்பாடானது பெரும் ஆச்சரியத்திற்குரியதொன்றாகியுள்ளது. தாம் ஆட்சிக்கு வந்தால் வடக்கு - கிழக்கின் அவசரப் புனரமைப்பிற்கு விசேட அதிகாரசபை ஒன்று அமைக்கப்படும் என அதிர்ச்சி தரக்கூடிய அறிவிப்பொன்றை அது விடுத்துள்ளது.

அதாவது, ஜே.வி.பி -சுதந்திரக்கட்சி இணைப்புத் தொடர்பான கூட்டறிக்கையில் அதிகார பரவலாக்கலானது கிராம மட்டத்திலானது என அடிமட்டத்தை தொட்டதாக இருந்த ஜே.வி.பி.யின் நிலைப்பாடானது தற்பொழுது விசேட அதிகாரசபை அமைப்பது வரையில் பேசவைத்துள்ளது. இதனை நம்ப வேண்டிய நிர்ப்பந்தத்தை எமக்கு -அதாவது தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

ஜே.வி.பி.யின் இத்தகைய நிலைப்பாடே ஆரம்பத்தில் குறிப்பிட்ட கேள்விகளை எழ வைக்கின்றது. ஒரு கட்சியின் வாக்குறுதிகளில் மக்கள் நம்பிக்கை வைப்பது அதன் கடந்த கால செயற்பாடுகளின் அடிப்படையிலேயேதான். ஆனால் அக்கட்சிகள் தமது கடந்தகால நடவடிக்கைகளுக்கு முற்று முழுதும் மாறான வாக்குறுதிகளை முன்வைக்கும் போது அவை தேர்தலுக்கானவை அன்றி நிறைவேற்றப்படத் தேவையற்றவை என்றே கொள்ளவேண்டியவையாகின்றன. அவ்வாறு இல்லாது விடில் இனவாதிகள் எல்லாம் சமதர்மவாதிகளாக மாறிவிட்டார்கள் என்றல்லவா கொள்ள வேண்டியிருக்கும்?

# சமாதான முயற்சிகள் தொடர்பான தெளிவான நிலைப்பாடு ஐ.ம.சு.மு.விடம் இல்லை

## -பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

ஐக்கியமக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில்கூறப்பட்ட அநேகமான விடயங்கள் நடைமுறைக்குச் சாத்தியமற்றவை என்றும், சமாதான முயற்சிகள் தொடர்பானதெளிவான நிலைப்பாடு அதில் இல்லை என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று அவிசாவளையில் கூட்டத்தில் பேசுகையில் பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தேர்தல் என்பது ஒரு வரையொருவர் குற்றம் சாட்டிக் கொள்ளும் களமல்ல அதாவது ஒருவர் கத்துவதை கேட்பது என்பதல்ல. அதேபோல் ஒரு வரையொருவர்மாறிமாறி குற்றசசாட்டுக்களையும் விமர் சனங்களையும் கூறும் களமும் அல்ல.

அதற்கப்பால் பிரச சினைகளுக்கு யாரும் மாற்று வழிகளை முன்வைக்கலாம். இந்த அரசாங்கத்திற்கு மாற்று வழி ஒன்று இருந்தது. நாம் மக்களுக்கு பொய் கூற வில்லை. உண்மையை மட்டும் கூறி வேலைவாய்ப்பு பெறக்கூடிய வகையில் திட்டமொன்றை முன்னெடுத்தோம் முதலாவது ஆண்டில் வேலை வாய்ப்புக்களை வழங்க முடியாது. நாட்டைக் கட்டி யெழுப்பி வேலைவாய்ப்பு வழங்குவதாகக் கூறினோம். இதனை மேற்கொள்ளும் தறுவாயிலேயே அது தடுத்து நிறுத்தப்பட்டது என்றும் பிரதமர்குற்றம் சாட்டி யுள்ளார்.

# புதிய அரசொன்றை அமைப்பதற்கான உதவி ஹெல உறுமயவிடமிருந்தே கிடைக்கும்

## தம்மாலோக தேரர் கூறுகின்றார்

(கொழும்பு)

புதியஅரசொன்றை அமைப்பதற்கு தமிழ்,முஸ்லிம் கட்சிகளிடம் இருக்கும் ஆதரவை இம்முறை ஹெலஉறுமய கைபற்றுமென மகரகமவில் நடைபெற்ற ஹெலஉறுமயவின் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய உடுவேதம்மாலோக தேரர் கூறியுள்ளார்.கூட்டம் பிரித் ஓதும்வைபவத்துடன் ஆரம்பமானது அங்கு உரையாற்றிய தேரர் மேலும் கூறியதாவது. இந் நாட்டில் மகிந்த தோரரால் ஆரம், பிக்கப்பட்ட பௌத்தசமயம் தற்போது பெரும் ஆபத்தை எதிர் நோக்குவதாகவும் பொதுத் தேர்தலின் பின்னர் இருபிரதான கட்சிகளும் தமிழர்களின் கோரிக்கைகளை நிவர்த்திசெய்யவே காத்திருப்பதாகவும் சிங்களவர் ஆட்சியமைக்கவாக களிப்பது மட்டுமே அவர்களுக்கு கிடைக்கும் நன்மை எனவும் கூறிய அவர், இந்தநிலையை மாற்றி நாட்டில் பௌத்த சமயத்தை ஓங்கச்செய்வது ஹெலஉறுமய ஒன்றே எனவும் தெரிவித்துள்ளார்.

# ஊழியர் உரிமைகளைப் பறிக்கும் சட்டங்களை உடன் நீக்குவோம்

ஐ.தே.முன்னணி அரசினால் கொண்டுவரப்பட்ட தனியார் துறை ஊழியர்களின் உரி மைகளைப் பறிக்கும் சட்ட ங்களை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி பதவிக்கு வந்தும் நீக்கி விடும் என முன்னாள் ஜே.வி.பியின் கம்பகா எம்.பி. விஜிதஹேரத் தெரிவித துள்ளார்.

கட்டுநாயக்காவில் நடை பெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி ஆட்சிக்கு வந்ததும் தொழிற்சாலைகள் கட்ட ளைச்சட்டம், சேவைஇடை நிறுத்தச் சட்டம் தொழிநுட்ப பிரச் சினைச்சட்ட போன்ற ஊழியரகளைப் பாதிக்கும் சட்டங்கள நீக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். அத்து டன் ஊழியர்களின் உரிமைகள் பாதுகாக்கும் வகையிலும் வேலை நிறுத்தப் போரா ட்டங்களின் போது பேச்சுக்களை நடத் துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பங்குச்சந்தை நடவடிக்கையில் வீழ்ச்சி

## தேர்தல் முடியும் வரை இந்நிலை தொடரும்

(கொழும்பு)

கொழும்பு பங்குச்சந்தை யில் இவ்வாரம் அனைத்து பங்கு விலைச் சுட்டெண்களும் வீழ்ச்சியடைந்துள்ளன. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பங்குகளை அதிகளவில் கொள்வனவு செய்து வருகின்றார்கள்.

நாட்டில் நிலவும் அரசியல் சர்ச்சை பங்குச் சந்தையில் மாற்றத்தை அதாவது வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. நான்கு வாரங்களின் பின்னர் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் 1200 ஐவிடக் குறைந்துள்ளது.

இதேவேளை, மிலங்கா விலைச் சுட்டெண்ணும் வெகுவாகக் குறைந்துள்ளது. பொதுத் தேர்தல் முடிவடையும் வரை இந்நிலை தொடரலாம். ஆட்சியமைக்கும் அரசாங்கத்தைப் பொறுத்து நிலை மாற்ற மடையும் என்று பங்கு முகவர் கள் கூறுகின்றனர்.

இதேவேளை, 19ஆம் திகதி கொடுக்கல் வாங்கல்களில், "புக்கிதான" மற்றும் "காக்கன" நிறுவனங்களின் பங்களிப்பால் அனைத்து பங்கு விலைச் சுட்டெண் களும் 1217.6 ஆக அதிகரித்துக் காணப்பட்டது. மிலங்கா விலைச் சுட்டெண்ணும் 1944.6ஆக காணப்பட்டது.

# சனாதிபதி முறையை நீக்கிவிடுவது தொடர்பில் ஐ.ம.சு. மு.வின் செயற்பாடு புதிராயுள்ளது

## -புதிய இடதுசாரி முன்னணி தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று சனாதிபதி முறையை நீக்கிவிடுவது தொடர்பில் அரசியலமைப்பில் மாற்றம் கொண்டு வருவதாகக் கூறப்பட்டிருப்பினும் அதன் கொள்கைகள் அதிகார வரம்பு என்பவை தெரிவிக்கப்படாது ரகசியமாகவே இருப்பதாக புதிய இடதுசாரிக்கட்சியின் தேசிய பட்டியல் வேட்பாளரான வாசுதேவ நாணயக்கார அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது;

2000ஆம் ஆண்டின் சனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட அரசியலமைப்பு திருத்தச் சட்ட மூலத்திலும் இருந்ததைவிட கூடுதல் அதிகாரம் சனாதிபதியிடம் உள்ளதையே அதனை உறுதிப்படுத்தும் வகையிலேயே இப்போதும் அவர் ஜே.வி.பி.யுடன் இணைந்து செயற்படுகின்றார். அவர் தனது எண்ணத்திற்கேற்றவாறே கடந்த காலங்களிலும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தார்.

ஏனைய கட்சிகளால் முன்வைக்கப்பட்ட அரசியல் சபையை சனாதிபதி ஆட்சேபம் செய்தமையும் தனது கட்டுப்பாட்டில் அனைத்தையும் உள்ளடக்கி வைப்பதையே இது உணர்த்துகிறது. முன்பு ஜே.ஆரினால் அரசியலமைப்பு மாற்றப்பட்டது. மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடனேயே. அதே போன்றே தற்போதும் அரசியலமைப்பை மாற்ற மூன்றில் இரண்டு ஆதரவு தேவை. எனினும் பெரும் வாக்குகளின் சதவீதம் குறைவாகக் கிடைக்கும் அரசு ஒன்றுக்கு அரசியலமைப்பில் மாற்றம் கொண்டு வரும் அதிகாரம் கிடையாது இவ்வாறு அவரின் அறிக்கை தெரிவிக்கின்றது.

# பா... உடனான டெஸ்ட் தொடர் இந்திய அணி வீரர்கள் அறிவிப்பு

பாகிஸ்தான் இந்திய அணிகளுக்கிடையில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள டெஸ்ட்போட்டிகளில் விளையாடும் இந்திய அணியின் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.ஒருநாள் போட்டிகளில் கலந்து கொள்ளாத அணியின் பந்து வீச்சாளர்களான அகர்கார் அனில் கும்ளே ஆகியோர் இத்தொடரில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அணிவிபரம்:

சௌரவ்கங்குலி(தலைவர்) ஆகாஸ் சோப்ரா, விரேந்தர் ஷெவாக், ராகுல் ராவிட், சச்சின்டெண்டுல்கர் வெலக்ஸ்மன், யுவராஜ்சிங், பாதீவ் பட்டேல், ரமேஸபவார், இர்பான் பதான்,சஹிர்கான், அகர்கார், பாலாஜி, கும்ப்லே, முரளிகார்த்திக்.



# நான் வெளியிட்ட செய்திகளைக்க
# அரச ஊடகங்கள்திரிவுபடுத்துகின்ற

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

தேர்தலுக்கு 72 மணித்தியாலங்களுக்கு முன்னர் (29ஆம் திகதி) இலத்திரனியல் ஊடகங்களில் தேர்தல் பிரச்சாரங்கள் நிறுத்தப்படவேண்டும் எனவும் சனாதிபதியோ, பிரதமரோ வெளியிடும் எந்த அறிக்கையோ, செய்தியோ 29ஆம் திகதிக்குப பின்னர் தேர்தல் முடியும்வரை வெளியிடக்கூடாது எனவும் அச்சு ஊடகங்களில் 24 மணித்தியாலங்களுக்கு முன்னர் தேர்தல் பிரச்சாரங்கள் நிறுத்தப்பட வேண்டும் எனவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரச்சாரங்கள் தொடர்பில் அரச மற்றும் தனியார் இலத்திரனியல் ஊடகங்களின் முதல்வர்களுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இக்கருத்தை வெளியிட்டார். தேர்தல் பிரச்சாரங்கள் திரிபுபடுத்தப்படக்கூடாது குற்றம் சுமத்தப்பட்ட ஒரு செய்தி ஒளிபரப்பானால் இதற்கு மாற்றாகக் குற்றம் சாட்டப்பட்டவர் வெளி யிடும் செய்தியும் உடகங்களில் ஒளிபரப்பாக வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார். இனி வரும் காலங்களில் இந்த ஊட கங்கள் செய்திகளைத் திரிபுபடுத்திக் கூறுமானால் அதற்கெதிராக தான் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும் எனவும் குறிப்பிட் டார். அரசாங்க ஊடகங்கள் சில செய்திகளைத் திரிபுபடுத்துவதால் சில பிரச்சினை கள் ஏற்படு[illegible] அரச ஊடகங்களில் [illegible] கொடுத்த செய்திகள் கூட[illegible] படுத்தப்பட்டதால் நேரடியாகத் தான் கலந்துகொண்டு செய்திகளை வெளியிடுவதால் இதனைத தவிர்ப்பதாகத் தெரிவித்தார். ஊடகத துறையில் சட்டங்களில் உள்ள குறைகள்தான் இதற்குக் காரணம் எனவும் ஆனால்,தனக்கு இந்தக் குறைகளைத் திருத்த அதிகாரம் இல்லை எனவும் தெரிவித்தார். (32)

# [illegible]லைக்கவசமின்றி செல்வோர் மீது
# [illegible]ப்ரல் 1 முதல் சட்டநடவடிக்கை

## தமிழீழ காவல்துறையினர் அறிவிப்பு

(அலுவலகசெய்தியாளர்)

[illegible]க்கவசம் அணியாது வீதிகளில் உந்துருளிகளை ஓட்டுப[illegible] மீது தமிழீழ காவல்துறை வீதிப்போக்குவரத்துப் பிரிவினர் [illegible]டிக்கை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். [illegible]ாது வீதிகளில் உந்துருளிகளின் பாவனை அதிகரித்து [illegible] அதிகமான விபத்துக்கள் உந்துருளியினாலேயே ஏற்பட் [illegible]மையின் காரணமாகவே மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதெனவும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதெனவும், இதனை கவனத்திற்கொண்டு தலைக்கவச மணிந்து உந்துருளிகளை செலுத்தும் வண்ணம் உந்துருளி உரிமையாளர்களை தமிழீழ காவல்துறை போக்குவரத்துப் பிரிவினர் வேண்டியுள்ளனர். (சோ)

# தேர்தல் பிரச்சாரத்திற்கு செலவிடும் நிதியை ஐ.ம.சுதந்திர முன்னணி வெளியிடுமா?

## - பெவ்ரல் அமைப்பு கேட்கின்றது

தேர்தல் கண்காணிப்புக்காக தமக்கு கிடைத்த நிதி தொடர்பாக கேள்வி எழுப்பும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, தாம் தேர்தல் பிரச்சாரத்திற்காக பெற்றுள்ள செலவு செய்யும் நிதி தொடர்பாக தகவலை வெளியிட வேண்டும் என பெவ்ரல் அமைப்பு கேட்டுள்ளது. இதுதொடர்பில் பெவ்ரல்அமைப்பின் பணிப்பாளர் கிங்ஸ்லி றொற்றிக்கோ தகவல் அளிக்கையில் தமது அமைப்பின் தேர்தல் கண்காணிப்புப் பணிக்காக கிடைத்தநிதிவெளிப்படையானது என குறிப்பிட்டிருக்கிறார். எந்த ஒருகட்சியினதும் கேள்விக்கு அமைய தாம் இதுவரை பெற்ற நிதியின் அளவை வெளியிட முடியும். என அவர் தெரிவித்திருக்கிறார். இதற்கு முன்னர் பெவ்ரல் அமைப்பு சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஆதரவு வழங்குவதாகவும் மக்கள் விடுதலை முன்னணிக்கு ஆதரவு வழங்குவதாகவும் விமர்சனங்கள் எழுந்தன. தற்சமயம்ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாக செயற்படுவதாக குற்றச்சாட்டு எழுந்திருக்கிறது. இந்த நிலையில் தேர்தல்வன்முறைகள் தொடர்பில் தான் 156 சம்பவங்களை இனங்கண்டுள்ளதாக கூறினார். எனினும் தமக்கு 650 முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாக அவர் தெரிவித்தார்.(32)

### மனிதாபிமான....

விக்கையில், பல்வேறு விடயங்கள் குறித்து இச்சந்திப்பில் பேசியுள்ளோம். கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்து எமது இடத்திற்குச் சென்று ஆராய்ந்த பின்னர் மீண்டும் அது குறித்து இங்கு வந்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவோமென தெரிவித்தார். (லோ, பி)

### பாதாள...

கிறார். சுமார் 5 மணித்தியாலங்களின் பின்னர் மீண்டும் அவர் சிறைச்சாலைக்கு அழைத்து வரப்பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளன. விடயம் சிறைச்சாலை அதிகாரிக்கு தெரியவரவே அவர் இதனை சிறைச்சாலை ஆணையாளருக்குத் தெரிவித்திருக்கிறார். (32)

### எமது....

ரத்திற்காக இத்தேர்தலை இம்முறை சந்திக்கின்றது. எத்தனையோ துரோகங்களையும், குழி பறிப்புக்களையும், அடக்குமுறைகளையும், இனஅழிப்புக்களையும் சந்தித்து நிற்கும் எமது ஈழத் தமிழினத்திற்கு இத்தேர்தல் முக்கியமானதாகும்.

தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் விடுதலைப்புலிகள் என்பதை உலகிற்கு உணர்த்தவும் எமது ஒற்றுமையின் பலத்தையும் அதை வழிநடத்தும் தேசியத்தலைமையின் உறுதியையும் சர்வதேசசமூகத்திற்குப் புரியவைக்கவும் இத்தேர்தல் எமக்கு ஒரு அரிய வாய்ப்பாக அமைந்துள்ளது. அன்பான உறவுகளே எமது சமூகத்திற்குள் புரையோடிப்போயிருக்கும் அத்தனை வேறுபாடுகளையும் அடியோடு மறந்து நாம் அனைவரும் ஈழத் தமிழர்கள் என்ற ஒரே உணர்வோடு தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிப்பதன் மூலம் தமிழர்களின் ஒன்றுபட்ட பலத்தை உலகிற்குக் காட்ட வேண்டியது உங்கள் ஒவ்வொருவரினதும் தேசியக்கடமையல்லவா? நீங்கள் இந்தத் தேசியக்கடமையை செவ்வனே நிறைவேற்றி தமிழ்த்தேசியக்கூட்டமைப்பை அமோக வெற்றி பெறவைத்து. இன்று ஒரு முக்கிய முனையில் வந்து நிற்கும் எமது விடிவிற்கான பாதையை அகலத்திறந்து வைத்து, அரசியல் அரங்கில் அரிய சாதனை படைத்து ஈழத்தமிழரின் ஒற்றுமையை உலகிற்கு உறுதிசெய்யுங்கள் எமது தேசத்தின் விடிவிற்காய் உறுதிபூண்டு உழைத்துக் கொண்டிருக்கும் புலம்பெயர்ந்த தமிழர்களாகிய நாம்இவ்வேளையில் தாய் மண்ணில் வாழும் உங்களிடம் அன்பாக வேண்டுகின்றோம். இத்தேர்தலில் உங்கள் வாக்குகளை சிந்தாமல் சிதறாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அளிப்பதன் மூலம் எமது அடிமைவிலங்கு உடைக்கும் இலட்சியப்பயணத்தை விரைவுபடுத்துவோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஈருருளி...

உதிரிப்பாகங்களும் எரிந்து சாம்பலாகியுள்ளன. அக்கடைக்கு அருகில் கட்டப்பட்டிருந்த பதாகைகளையும் அந்த இளைஞர்கள் தீயில் போட்டு எரியூட்டியதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். கடை உரிமையாளர் முன்னிலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதை யார் செய்தார்கள் ஏன் செய்தார்கள், என்ற விபரங்கள் எவையும் தெரியவரவில்லை. (32)

### மண்டைதீவில்...

ரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் இவ்விடயம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டு உரிய அனுமதியை பெற்றுத்தருமாறு அவர் கடிதமூலம் கோரியுள்ளார். (27)

### சுதந்திரமாக....

"தமிழத் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தனுடனான சந்திப்பின்போது ஐரோப்பிய யூனியனின் உறுப்புநாடுகளின் இலங்கைக்கான தூதர்கள் "பொதுத் தேர்தலின் பின்னர் உருவாகும் அரசியல் சூழலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தக் கட்சிக்கு ஆதரவை வழங்கப் போகிறது? என்று கேட்டனர்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு கொள்கை அடிப்படையிலானதாகவே அமையும். விடுதலைப்புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவை ஏற்றுக்கொண்டு பேச்சுக்களை நடத்த முன்வரும் கட்சிக்கே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு இருக்கும்" என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச்செயலாளா நாயகம் இரா.சம்பந்தன் ஐரோப்பியநாடுகளின் தூதர்களுக்கு திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தனை நெதர்லாந்துத்தூதர் தலைமையில் பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மன, இத்தாலி, சுவீடன் ஆகிய நாடுகளின் தூதர்கள் சந்தித்து இலங்கை அரசியல் நிலவரம் மற்றும் வடக்கு-கிழக்கு மாகாண அரசியல் நிலவரம் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

நண்பகல் 12.20 அளவில் ஆரம்பமான கலந்துரையாடல் பிற்பகல் 1.20 மணிவரை இடம்பெற்றது. "வடக்கு கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் வாழும் பல்லாயிரக்கணக்கான தமிழ் வாக்காளர்கள் சுதந்திரமாக துன்புறுத்தல் எதுவுமின்றி எதிர்வரும் பொதுத்தேர்தலில் தங்களின் வாக்குரிமையைப் பயன்படுத்துவதை ஐரோப்பிய யூனியன் நாடுகள் உறுதிசெய்யவேண்டும். விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி தமிழ் வாக்காளர்கள் தங்கள் வாக்குரிமையைச் செலுத்த முடியாது தடுக்கப்படின் அம்மக்கள் இலங்கையின் தேர்தல் முறை மற்றும் சனநாயக நடைமுறைகளில் நம்பிக்கையிழப்பர். அது மாத்திரமல்ல சமாதான முயற்சிகளும் கடுமையாகப் பாதிப்புக்குள்ளாகும். இத்தமிழ் வாக்காளர்கள் வாக்களிக்க அமைகப்படும் கொத்தணி வாக்களிப்பு நிலையங்களில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஐரோப்பிய யூனியன் அவதானிகள் ஈடுபடுத்தப்படவேண்டும். இதை ஐரோப்பிய யூனியன் உறுதிசெய்ய வேண்டும்'' என்றும் சம்பந்தன் ஐரோப்பிய நாடுகளின் தூதர்களிடம் வலியுறுத்தினார். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் உள்ள வாக்காளர்கள் வாக்களிப்பது தொடர்பாக சில பகுதிகளில் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படாமல் இருக்கிறது என்பதையும் சம்பந்தன் ஐரோப்பிய தூதர்களுக்குச் சுட்டிக் காட்டினார். கிழக்கு நிலவரம் பற்றியும் ஐரோப்பிய நாடுகளின் தூதர்கள் சம்பந்தனிடம் விசாரித்தனர். தமிழ்த் தலைவர் எஸ். ஜே.வி.செல்வநாயகம் அரைநூற்றாண்டுக்கு முன்பே தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகம் வடக்கு-கிழக்கு என்பதை அடிப்படையாக கொள்கையாக வலியுறுத்தி வந்துள்ளார். ஒஸ்லோ பிரகடனமும் அதையே வலியுறுத்துகின்றது.விடுதலைப்புலிகள் தயாரித்து சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபை முன்மொழிவு வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியத்தாயகக் கோட்பாட்டினை வலியுறுத்துகின்றது என்று சம்பந்தன் ஐரோப்பியத் தூதர்களுக்கு விளக்கினார். வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தற்போது தேர்தல் செயற்பாடுகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பது பற்றியும் கலந்துரையாடப்பட்டது. (25)

### அனுசரணையாளர்க...

றோம். தமிழ் மக்களுடைய பிரதிநிதிகளாகவும் தமிழ்மக்களுடைய அபிலாசைகளை, எதிர்காலத்தை சரியான முறையில் முன்னெடுத்துச்செல்கின்ற கடமையுடனும், பொறுப்புணர்வுடனும் நாங்கள் இருக்கின்றோம், எந்தக் கூட்டணி ஆட்சிக்கு வந்தாலும் புலிகளுடைய நிலைப்பாடு தமிழ்மக்களுடைய அபிலாசைகளை முன்னெடுத்துச் செல்கின்ற வகையில் மக்களின் சார்பாகவும் தமிழ்த்தேசம் சார்பாகவும் புலிகளையே தமிழ் மக்களுடைய பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு பேசமுன்வருபவர்களுடன் நாங்கள் பேச்சு வார்த்தை நடத்துவோம்.

குறிப்பாக தமிழ்மக்களுடைய அபிலாசைகளையும், நிலைப்பாடுகளையும் ஏற்றுக்கொண்டு வருகின்ற எந்த அதிகாரபீடத்துடனும் தான் நாங்கள் சமாதானப்பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்லக்கூடியதாக இருக்கும். இவ்யதார்த்தத்தை அங்கே உள்ள கட்சிகள் தெளிவாக உணர்த்தியிருப்பார்கள் என நான் நினைக்கின்றேன்.

கடந்த காலங்களில் நாங்கள் சமாதானத்தை முன்னெடுத்துச் செல்ல முயன்ற வேளைகளில் எல்லாம் இவ்யதார்த்தத்தை உணரத்தவறியமையால் தான் சமாதான முன்னெடுப்புக்களை முன்னெடுத்துச்செல்வதற்கு தடைகள் ஏற்பட்டன.

***கேள்வி: 1994/2001 ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தலை விட இம்முறை தேர்தல் சற்று வித்தியாசமாவுள்ளது. இரு கட்சிகளுமே சமாதானத்தைப் பற்றிப்பேசுகின்றன. ஆனால் புலிகள் சுயநிர்ணய உரிமை, தாயகக்கோட்பாடு, தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகள் புலிகள் என்பதில் ஆணித்தரமாக இருக்கின்றனர். ஆனால் ஐ.ம.சு.முன்னணியின் விஞ்ஞாபனத்தில் இவ்விடயங்கள் குறிப்பிடப்படாமல் இருப்பதால் புலிகள் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தங்களுடன் தயாராக இருக்கின்றார்களென சனாதிபதி கூறுவதற்கு இடையிலே ஒரு பாரிய வேற்றுமை இருக்கின்றது. இது பற்றிஉங்களின் கருத்து?***

பதில்: 1994 ஆம் ஆண்டுக்கு பின்னால் வந்த தேர்தலின் போதும் ஆரம்பத்தில் சந்திரிகா அம்மையாருடைய தலைமையிலான கூட்டணி சமாதானத்திற்கான ஒரு ஆணையை கோரி மக்களிடம் வாக்கைப்பெற்றது.

அதேபோன்று ரணிலும் சமாதானத்திற்கான ஒருஆணையை கோரியபோது அம்மக்கள் சமாதானத்திற்கான உறுதியான ஆணையை வழங்கினார்கள். இவ்வகையில் பார்க்கும்போது சிங்கள தேசத்தில் வாழ்கின்ற சிங்கள மக்கள் கூட சமாதானத்தையும் அமைதியையும், தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வை முன்வைக்க வேண்டும் என்பதில் எப்பொழுதும் அவர்களுடைய கருத்துக்கள் உறுதியாக இருக்கின்றன. சனாதிபதியினதும் பிரதமரினதும் உள்நோக்கங்கள் எப்படி இருக்கின்றன என்பது எங்களால் தற்போது கூறமுடியாது. ஆனால் இரு தரப்பும் சமாதானத்தின் மீது தங்களுடைய கட்சி உறுதியுடன் இருப்பதாக வெளிக்காட்டுகின்றனர். சிங்கள மக்கள் அப்படியான ஓர் கருத்தோடு இருக்கின்றார்கள் என்ற நிர்ப்பந்தத்தின் அடிப்படையில் தான் இவர்கள் சமாதானத்திற்கான ஒரு வலுவான [illegible] கருத்துக்களை மேடைகளில் முழா[illegible]கின்றனர். ஆனால் சிங்கள [illegible]கள் சரியாக இனம் கண்டுகொ[illegible]வார்களென நினைக்கின்றேன். யார் சமாதான முன்னெடுப்புக்களை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லக்கூடிய உறுதிப்பாட்டுடனும் அர்ப்பணிப்புடனும் நேர்மையுடனும் இருக்கின்றார்கள் யார் என்பதை சிங்கள மக்கள் தான் தெரிந்துகொள்ள வேண்டும்.

***கேள்வி:- புலிகளுடன் சனாதிபதி பேச்சுவார்த்தை சம்பந்தமான தொடர்பினை ஏற்படுத்தியுள்ளாரா?***

பதில்:- இது மிகவும் தவறான கருத்து. 1994/1995 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது ஏற்பட்ட அனுபவத்தின் அடிப்படையில் புலிகளின் தலைமைப் பீடம் மிக உறுதியான நிலைப்பாட்டை இன்று எடுத்துள்ளது. அதாவது இனிவரும் காலங்களில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச்செல்வதாயிருந்தால் மூன்றாம் தரப்பு அனுசரணை அல்லது மத்தியஸ்தத்தோடுதான் முன்னெடுத்துச்செல்ல முடியும். அப்படியான [illegible]டைமுறையோடு தான் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணலாம் என்பது எமது தலைமைப்பீடத்தினுடைய உறுதியான நிலைப்பாடு. இதனைப் புறந்தள்ளி இரகசியமான முறையில் தனிப்பட்ட ரீதியில் எந்தக்கட்சிகளுடனும் [illegible]லிகள் தொடர்புகொள்ள [illegible]ண்டிய தேவையும் இருக்காது. [illegible]படியான தொடர்புகளை மேற்கொள்ள முற்படப்போவதுமில்லை. புலிகளைப் பொறுத்தவரை நாங்கள் இதில் தெளிவாக இருக்கின்றோம். நோர்வேயின் சர்வதேச சமூகத்தினுடைய ஆதரவுடன் அவர்கள் அனுசரணைகளை வழங்கியிருக்கின்றார்கள். அந்த அனுசரணையாளர்கள் ஊடாகவே சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான முன்னெடுப்புக்களாக இருக்கலாம். அல்லது தொடர்பாடல்களாயினும் எதுவும் அவ்வகையில் தான் புலிகள் முன்னெடுத்துச்செல்வார்களே தவிர தனிப்பட்ட ரீதியாக இரகசியமான முறையில் சனாதிபதியோடோ அல்லது வேறு எவரிடமோ நாங்கள் தொடர்புகளால் மோதுவதற்கு எமது தலைமைப் பீடம் முயற்சி எடுக்கவில்லை. அவர்கள் முயற்சி எடுத்திருந்தாலும் அதனை நாங்கள் ஏற்றுக் கொள்ளப்போவதுமில்லை.

***கேள்வி:- எந்தப் பேச்சுவார்த்தையும் ஒரு மத்தியஸ்தத்துடன் இருக்கின்ற அனுசரணையாளர்களூடாகத் தான் நடத்துவோம் என அப்படியான அனுசரணை இதுவரை சனாதிபதி ஊடாக உங்களுக்குக் கிடைக்கவில்லையா?***

பதில் :- இதுவரை அப்படியொன்றும் கிடைக்கவில்லை.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.